மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 7 சுற்றம் : 7 / ஜூலை 2019 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## ஆரிய மாதாவா தமிழன்னை?

## தமிழ்த்தாய் ஆதினம் கடவுளால் உருவாக்கப்படுவது ஏன்?

கட்டுரைகள்



## கல்லூரிகளில் இந்திப்பாடம்



## 10%இடஒதுக்கீடு பா.ஜ.க. செய்யும் சமூகநீதி கொலை

எம்.எல்.ஏ. கருணாஸ் பேச்சு



■
கவிக்கோ
அப்துல்ரகுமான்
அவர்களால்
தொடங்கி வைக்கப்பட்ட
கவிதைச் சிறகுகள்
அமைப்பு
முற்றம் இதழுக்கு
விருது
வழங்கி சிறப்பித்தது.
■


# A.M. Bags



All types of Bags, Suitcase

SALES & SERVICE



No.22, Madambakkam Main Road,
Sudharsan Nagar, Madambakkam,
Chennai -126
Cell : 97908 52074

ஐந்து வீட்டு சுவாமி துணை



# கணேஷ் மெடிக்கல்ஸ்
# GANESH MEDICALS

சரவணா ரைஸ்மில் வளாகம்

நெ.1, மாடம்பாக்கம் மெயின் ரோடு, சுதர்சன் நகர், சென்னை - 600 126

Cell: 99411 93605 / 044 - 48678855

ALL MEDICINES AVAILABLE FREE HOME DELIVERY

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly June 2019

ஆசிரியர்
**விசவனூரர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே.பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**எஸ்தர்ரோஸ்லின்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

நிர்மலா சீத்தாராமன்
சொல் – செயல் – முரண் (தலையங்கம்)........ 4

ஆரியர்கள்
– இமயவரம்பன்........ 5

தேவதாசி முறையை ஒழித்த முத்துலெட்சுமி அம்மையார் ........7

தமிழ்த்தாய் ஆதினம் கடவுளாள் உருவாக்கப்படுவது ஏன்?
– தமிழர் சமயம் முனைவர் மு. தெய்வநாயகம் ........8

போதைப் பொருட்கள் ஒழிப்பு
– இருங்கோவேள்........ 10

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு........13

உறுப்பினர் சேர்ப்பு ........14

கரும்புலிகள் உருவாக்கத்தின் பின்னணி
சைதை மணிமாறன்........ 16

நீட் தேர்வால் தொடரும் தற்கொலைகள் தீர்வு என்ன?
மருது ........19

அணுக்கழிவு மையமா? உயிரை அழிக்கும் மையமா?
சுப. உதயகுமாரன்........ 20

வேலைவாய்ப்பு ........22

ஆரிய மாதாவாகிறாரா தமிழன்னை
முனைவர் ந.க. மங்கள முருகேசன் ........24

திருக்குறள் : பாவலரேறு பெருஞ்சித்திரனார் ........26

அருட்கவிஞர் துக்காராம்
சித்தாந்த ரத்தினம் வி.டி. இராமகிருஷ்ணன்........ 27

கல்லூரிகளில் இந்திப்பாடம்........ 31

10% சதவீத இட ஒதுக்கீடு
எம்.எல்.ஏ. கருணாஸ் பேச்சு ........32

கவியரசர் கண்ணதாசன் விழா ........34

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.
*– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



வாழ்க தமிழ்!

# நிர்மலா சீத்தாராமன் சொல் - செயல் - முரண்

நடுவண் அரசின் நிதிநிலை அறிக்கை வெளி வந்ததும் உடனே பெட்ரோல், டீசல் விலை உயர்ந்துள்ளது. இந்த விலையேற்றம் என்பது எல்லாப் பொருள்களின் விலையேற்றங்களுக்கு காரணியாக அமையும் என்பதை பொருளாதார வல்லுநர்கள் நன்கறிவார்கள். பொதுமக்களும் விலையேற்றங்களை தரம் பிரித்து புரிந்து கொள்ளும் நிலையிலேயே இருக்கின்றனர் என்ற போதும் நடுவண் அரசு அதைப்பற்றி எல்லாம் கவலை கொள்ளாமல், கருத்தில் கொள்ளாமல் எரிபொருள் விலையேற்றத்தைக் கொண்டு வந்துள்ளது.

நிர்மலா சீத்தாராமன் அவையில் உச்சரித்த புறநானூற்றுப் பாடலுக்கும், அவரது செயலுக்கும் முரண் இருப்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

இந்த நிதிநிலை அறிக்கையில் மொத்த வருவாய் எவ்வளவு, மொத்த செலவினம் எவ்வளவு, பற்றாக்குறை இருக்கிறதா, அல்லது செலவினத்தை விட வருவாய் அதிகமாக இருக்கிறதா என்ற விபரங்கள் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. திட்டங்கள் மட்டும் புதுப்புதுப் பெயர்களில் அறிவிக்கப்படுகின்றன. செயல்பாடுகள் எப்படி இருக்கின்றன, இருக்கப் போகின்றன என்று பார்த்தோமானால் இருந்த இடத்திலேயேதான் நின்று கொண்டிருக்கிறது இந்தியா.

இந்திய ஒன்றியத்தின் வேளாண் தொழிலுக்கும், தொழிலாளர்களுக்குமான நல்ல திட்டங்கள் இடம்பெறாதது நாட்டின் பின்னடைவாகவே கருதப்படுகிறது. தொலைநோக்குப் பார்வையில் தொய்வு உள்ளதை இந்த நிதிநிலை அறிக்கை காட்டுவதாகவே பொருளாதார நிபுணர்கள் கருத்துக் கூறுகிறார்கள்.



ஒரே நாடு, ஒரே பண்பாடு, ஒரே வரி, ஒரே கல்வி, ஒரே தேர்தல், ஒரே சாப்பாடு? என்கிற அளவில் அறிவிப்புகள் இருக்கின்றன. இவ்வறிவிப்புகள், விடுதலைக்குப் பின் பல பண்பாடுகள் கொண்ட சிறு சிறு ஆளுகைகளை ஒன்றாக்கி இந்திய ஒன்றியம் என்று உருவாக்கப் பட்டது. அப்படி உருவாக்கப்பட்ட போது கொடுக்கப்பட்ட வாக்குறுதி களை மீறுவதாகவே ஒற்றுமைக்கு பாடுபடுபவர்கள் கருதுகிறார்கள். தற்போது இயங்கி வருகிற மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதாகவும் எதிர்காலத்தில் ஒரு எதேச்சதிகார, சர்வாதிகார அரசை நாம் எதிர் கொள்ள வேண்டியது வருமோ என்ற அச்ச உணர்வை பல மாநில மக்களின் மனங்களில் ஏற்படுத்துவதாக இருக்கிறது.

எரிவாயு திட்டங்கள் மூலம் வருவாய் திரட்ட முடிவு செய்யப் பட்டிருக்கிறது என்ற அறிவிப்பு, மீத்தேன் ஹைட்ரோ கார்பன் போன்ற நச்சுத் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி தமிழகத்தை பாலை நிலமாக மாற்றுவதற்கான அறிவிப்பு என்று தமிழ் உணர்வாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

*“காய் நெல் அறுத்துக் கவளங் கொளினே*
*அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே*
*பரிவுத எடுக்கும் பிண்டம் நச்சின்*
*யானை புக்க புலம்போல*
*தானும் உண்ணான், உலகமும் கெடுமே“*

***ஆசிரியர்.***

# ஆரியர்கள்



அமெரிக்காவை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது 2 சதவீதமே உள்ள ஆரிய யூதர்கள், அமெரிக்காவின் அதிகாரமும் யூதர்கள் கைகளில் தான் பொருளாதாரமும் யூதர்கள் கையில் தான்.

இந்தியாவை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது 3 சதவீதமே உள்ள ஆரிய பார்ப்பனர்கள், இந்தியாவின் அதிகாரம் முழுக்க பார்ப்பனர்கள் கையில் தான். இந்தியாவின் பொருளாதாரம் பார்ப்பனர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பனியாக்கள் கையில்.

அந்த அமெரிக்காவில் வந்தேறி யூதர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து ஒரு சிறு கலகம் கூட இதுவரை நடந்தது கிடையாது. அப்படி எந்த அரசியல் கட்சியேனும் பேச ஆரம்பித்தால், யூதர்களிடம் இருந்து செல்லும் பண உதவி நிறுத்தப்பட்டு எதிர்கட்சி ஜெயிக்க வைக்கப்படும். இதற்கு பயந்தே யூதர்களை எதிர்ப்பதற்கு பதில் இஸ்ரேலில் யூதர்களுக்கு தேவையானதை செய்து கொடுக்கிறோம் என்ற வாக்குறுதியை கட்சி பேதமின்றி அனைத்து கட்சிகளும் முன் வைத்து யூதர்களின் பொருளாதாரத் திற்காக யாசகம் கேட்டு நிற்கும் நிலைமை தான் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது".

நாகரீகத்திலும், அறிவியல் அறிவிலும் உச்சத்தில் இருப்பதாக நம்பப்படும் அமெரிக்காவில் செய்ய முடியாத ஆரிய ஆதிக்க எதிர்ப்பை, இந்தியத் துணைக் கண்டத்தில், ஒரு சின்னஞ்சிறு பகுதியான தமிழ் நாட்டில் ஆரிய இனத்தை சேர்ந்த பார்ப்பனர்களுக்கு எதிராகக் கட்டமைத்து, அதை ஒரு சித்தாந்தமாக மாற்றி, 2000 ஆண்டுகள் கழித்து ஆரியத்தை திக்கு முக்காட செய்தது திராவிடர் இயக்கம் தான்.

அப்படி என்றால் பெரியார் கட்டமைத்த இந்த கொள்கை எவ்வளவு வலிமையானது என்பதையும், நம்முடைய எதிரி எவ்வளவு வலிமையானவன் என்றும் நாம் முதலில் உணர வேண்டும்.

நாங்கள் தான் கடவுளின் நேரடி படைப்பு என்ற சித்தாந்தத்தை பெரும்பான்மை மக்களை நம்பவைத்து, அதனால் அதிகாரத்தை சுவைத்து வந்த கூட்டத்தால், தங்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்டுள்ள திராவிடர் என்ற எதிர் சித்தாந்தத்தை சாதாரணமாக பார்க்காது.

அந்த சித்தாந்தத்தை நேரடியாக இனி வீழ்த்த முடியாது என உணர்ந்து தான், நம்மவர்களில் சில கைக்கூலிகளை தமிழ்நாட்டில் உலாவவிட்டுள்ளது. இது இதோடு நிற்காது. இன்னும் பல்வேறு நெருக்கடியை நமக்கு கொடுக்கும்.

உலகத்தில் எதிர்க்க முடியாத சக்தியாக வலம் வந்து கொண்டிருந்த ஆரிய இனத்தை தமிழ்நாட்டில் கடும் நெருக்கடிக்கு உள்ளாக்கிய திராவிடக் கொள்கைக்கு சொந்தக்காரர்களாக நாம் நம் எதிரிகளை, இனத் துரோகி களை வீழ்த்த இன்னும் பல மடங்கு வலிமையாக வேண்டி யது காலத்தின் கட்டாயம்!

வாட்ஸ்அப்பிலிருந்து...

***இமயவரம்பன்***

# தாய்ப்பாலுக்கு இணை தேங்காய் பால்



தேங்காய் உபயோகம் மாரடைப்பில் முடியும் என்று நிறைய பேர் கைவிட்டனர். அது தவறாகும்

பொதுவாக தேங்காயில் அதிகமாக கொழுப்பு உள்ளது என்பது உண்மைதான்! ஆனால், எப் பொழுது கொழுப்பு உருவாகுமென்றால், அதை சமைக்கும் போதுதான் தேங்காய் கொழுப்பாய் மாறும்! தேங்காயை உடைத்த அரைமணி நேரத்திற்குள் பச்சையாக சாப்பிட்டுவிட்டால் அதுதான் அமிர்தம்! அது சகலவிதமான நோய்களையும் குணமாக்கும்! உடம்பில் உள்ள கெட்ட கொழுப்பு மற்றும் அழுக்கு களை அகற்றும். இரத்தத்தை சுத்தமாக்கும், உடலை உரமாக்கும், உச்சிமுதல் பாதம்வரை உள்ள உறுப்பு களைப் புதுப்பிக்கும்.

நாம், அன்னை வயிற்றிலிருந்து பூமிக்குவர 10 மாதம் ஆகிறது. அதுபோல தேங்காய் கருவாகி பூமிக்கு வர 10 மாதம் ஆகிறது. ஆகவே நமக்கும் தேங்காய்க்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பதை மறக்க வேண்டாம்.

தேங்காயை குருமா வைத்து சமைத்து உண்டால் கெட்ட கொழுப்பாக (கொலஸ்ட்ரால்) மாறிவிடும். சமைக்காமல் அப்படியே உண்டால் நல்ல கொழுப்பு (கொலஸ்ட்ரால்)! தேங்காயை துருவி சிறிது நாட்டு சர்க்கரை சேர்த்து குழந்தைகளுக்கு மாலை சிற்றுண்டி யாக அளித்தல் நன்மை பயக்கும்.

பழங்காலத்தில் இறக்கும் தருவாயில் இருக்கும் நபர் களுக்கு தேங்காய் பால் கொடுத்து, வாழ்நாட்களை நீட்டிப்பு செய்துள்ளார்கள்! ஆனால் இப்போது, மாட்டுப் பால் ஊற்றி துக்கத்தில் ஆழ்கிறார்கள்!

தாய்ப்பாலுக்கு மாற்றாக தேங்காய் பாலை குழந்தை களுக்கு கொடுத்து காப்பாற்றி இருக்கிறார்கள்! ஆனால் இப்போது இரசாயண கலவையுடன் பாக்கெட் பால் கொடுக் கப்படுகிறது.

காலையில் தேங்காயைத் துருவி, அதனை அரைத்து பாலெடுத்து அதனுடன் நாட்டுச் சர்க்கரை அல்லது கருப்பட்டி அல்லது தேன் சேர்த்து உண்பது உடல் நலத்திற்கு ஏற்ற தாகும்.

**கே. பவானி, எம்.ஏ.,**

# தலையில் கல்!

*தெலுங்கானா மாநிலத்தில் ஒரேயொரு பா.ஜ.க. எம்.எல்.ஏ. இருக்கிறார். அவர் பெயர் ராஜாசிங் கடந்த ஒருஇரவு 1 மணிக்கு தனது ஆதரவாளர்களுடன் ஹைதராபாத்தில் உள்ள ராணி அவந்திபாய் சிலை இருக்கும் இடத்திற்கு பழைய சிலையை மாற்றிவிட்டு புது சிலையை வைக்கப்போவதாக சொல்லிப் போயிருக்கிறார்.*

*அங்கு வந்த காவல்துறையினர், அதற்கு காவல்துறையின் முன் அனுமதி வாங்கவேண்டும் என சொல்ல அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டு அசம்பாவிதம் அரங்கேறியது. எம்.எல்.ஏ. தலையில் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகி, “போலீசார் என்னை கல்லைக் கொண்டு தலையில் தாக்கினார்கள். இதற்கு பதிலாக என்னை உயிரோடு கொன்றிருக்கலாம்” என அழுது பேட்டி தரவே மாநிலம் முழுதும் கலவரத்தை அரங்கேற்ற பா.ஜ.க திட்டமிட்டது.*

*இந்த இடத்தில் திடீர் திருப்பமாக ஹைதராபாத் கமிஷனர் அஞ்சனி குமார் சம்பவம் நடந்த அன்று பதிவு செய்யப்பட்ட வீடியோவை வெளியிட்டுள்ளார். பா.ஜ.க.எம்.எல்.ராஜாசிங் கல்லை அவரே எடுத்து அவர் தலையில் அடித்துக்கொள்கிற காட்சி அதில் இருக்கிறது. இதனைத்தொடர்ந்து காவல்துறை மீது அவதூறு பரப்பியதற்காக புது கேஸ் ஒன்றை ஹைதராபாத் காவல்துறை பதிந்துள்ளது.*

*உணர்ச்சிகளைத்தூண்டி கலவரம் ஏற்படுத்துவது என்பது பா.ஜ.க.விற்கு கைவந்த கலை தான் என்றாலும் தென் மாநிலங்களில் அவர்களது திட்டங்களை முறியடித்துவிடுவது சங்கிகளுக்கு பெரும் தலை வலியாக இருக்கிறது.*





# தேவதாசி முறையை ஒழித்த முத்துலெட்சுமி அம்மையார்

இருபதாம் நூற்றாண்டு தொடக்கம் வரை தேவதாசிகள் இல்லாத கோவில்களே தென்னிந்தியா வில் இல்லை. இராசராச சோழன் காலத்தில் தஞ்சை பெரிய கோவிலில் மட்டும் நானூறு தேவதாசிகள் இருந்ததாக சொல்கிறார்களே அது உண்மையா?

அது வரலாற்று அவதூறு! தேவரடியார்கள் என்பது வேறு தேவதாசிகள் என்பது வேறு! தேவரடியார் என்பவர்கள் இப்போது உள்ள சிவனடியார் போல, கிறித்தவ மதத்திலுள்ள கன்னியாஸ்திரிகள் போல இறைவனுக்கு அருட்பணி செய்கிறவர்கள். இராசராசன் காலத்தில் தேவரடியார்களே இருந்தார்கள். அவர்கள் பெரும்பாலோ னோர் அரசகுடும்பத்தை சேர்ந்தோர் ஆவர்.

தேவதாசி முறை விஜயநகர ஆட்சிகாலத்தில் வந்தது இதை கர்நாடக கல்வெட்டுகளே சான்று பகிர் கின்றன. ஆனால் இராசராசன் காலத்தை வரலாறு அறியாது வசைபாடுகின்றனர்.

விஜயநகர ஆட்சிகளில் பயன்படுத்தப்பட்ட தேவதாசிகள் விபச்சாரிகளாக செயல்பட வேண்டும். நாற்பத்தைந்து வயதுக்கு மேலான பெண்களை கோவில் நிர்வாகமே ஏலத்தில் விற்கும் வழக்கமும் இருந்தது.

இன்றைய இளைஞர்களுக்கு பெரியாரின் சமூக சீர்திருத்தங்களைப் பற்றிய இந்த வரலாறு தெரிய வாய்ப்பில்லை. முத்துலெட்சுமி அம்மையார் தேவதாசி ஒழிப்புப் பற்றிய தீர்மானத்தை சட்டசபையில் கொண்டு வந்தார். அப்போது இராசாசி இதில் அக்கறை இல்லாமல் நடந்து கொண்டார். சத்தியமூர்த்தி ஐயர், சீனிவாச ஐயங்கார், கோவிந்த ராகவய்யர், ஷேசகிரி ஐயர், மு.வ.ராமநாத ஐயர் எனும் பார்ப்பன அணி இதை எதிர்த்தது. பெண் விடுதலைச் சட்டம் அனைத்தையும் எதிர்த்தவர்கள் இவர்களே.

இதற்கு பார்ப்பனர்கள் சொன்ன காரணம் என்னவென்றால். இது சாத்திர விரோதம், மத விரோதம், இந்தச் சட்டத்தை எதிர்த்து நாங்கள் சிறைக்குப் போனாலும் போவோமே தவிர, சாத்திரத்தை எதிர்த்து நாங்கள் நரகத்திற்குப் போகச் சம்மதிக்க மாட்டோம் என்று கூறி, தேவதாசிப் பெண்களை வைத்தே இந்த தீர்மானத்தை எதிர்த்துப் போராட வைத்தனர்.

இந்த இக்கட்டான சூழலில் பெரியாரிடம் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் “இந்த மாதிரி சட்டமன்றத்தில் பேசினார்கள். இதற்கு என்ன பதில் சொல்லுவது? நாளைக்கு இந்த மசோதா மீது பேசியாக வேண்டும் என்ன செய்வது?“ என்று கேட்டார்.

அதற்குப் பெரியார் “நான் சொல்லுகிறபடி நீங்கள் சட்டமன்றத்தில் பேசுங்கள்“ என்று சொல்லி அனுப்பினார். பெரியார் சொன்னதை உள்வாங்கிக் கொண்டு, அடுத்த நாள் முத்துலெட்சுமி அம்மையார் சட்டமன்றத்தில் விளக்கம் கொடுக்கத் தயாராக இருந்தார். அப்போது சத்தியமூர்த்தி ஐயர் பேசினார். “தேவர்களுக்கு அடியாள் என்றால், அது கடவுள் தொண்டு என்று அர்த்தம் என்றும் அவர்கள் தங்களை அர்ப்பணித்து, தொண்டு செய்வதால் புண்ணியம் பல சேர்த்து புண்ணியவதியாகிறார்கள்“ என்றார்.

அதற்கு முத்துலெட்சமி அம்மையார், அந்தப் பார்ப்பனர்களைப் பார்த்து “தேவதாசி ஒழிப்பு தீர்மானத்திற்கு எதிராகப் பேசும் உங்களிடம் ஒன்றே ஒன்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரையில் எங்க சாதியிலேயே உள்ளவர்கள் கடவுளுக்கு இந்தத் தொண்டை செய்து, எக்கச்சக்க புண்ணியத்தை சேர்த்து வைத்துள்ளார்கள். இனிமேல் அந்தத் தொண்டை உங்கள் பிராமண பெண்கள் செய்யட்டும். நீங்களும் புண்ணியம் சேர்த்துக் கொள்ளுங்கள். அதற்கு யாரும் எதிர்ப்புக் கூறமாட்டார்கள். உங்கள் சாத்திர சம்பிரதாயங்களும் கெட்டுப் போகாது“ என்றார். இதைக் கேட்ட பார்ப்பனர்கள் முகம் கோணலாகிப் போனது. அவர்களது நீண்டகால சூழ்ச்சியும் நிறைவேறாமல் போனது. இவ்வளவு பிரச்சினைகளை மீறித்தான் தேவதாசி ஒழிப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெரியார் என்றாலே ஏன் பார்ப்பனர்கள் வெறுப்பை உமிழ்கிறார்கள் என்று இப்பொழுதாவது புரிகிறதா?

# தமிழ்த்தாய் ஆதினம் கடவுளால் உருவாக்கப்படுவது ஏன்?

## 'தமிழர் சமயம்' முனைவர் மு. தெய்வநாயகம்



'தமிழினத்தை நீச இனம்' என்றும் 'தமிழ் மொழியை நீச மொழி' என்று இழிவுபடுத்தும் சங்கர மடத்தின் கொள்கையை எதிர்த்து, தமிழ் மொழி ஒரு ஆன்மீக மொழி என்றும் 'தமிழ் இனம் ஒரு ஆன்மீக இனம்' என்றும் வரலாற்று அடிப்படையில் நிறுவும் தமிழ்த்தாய் ஆதினம் கடவுளால் உருவாக்கப்படுகிறது. அதற்கு ஏற்றபடி உலக சமயங்களை ஒன்றிணைக்கும் தமிழர் ஆன்மவியல் அறக்கட்டளை, கடவுளால் வழி நடத்தப்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக கோவை யில் நாம் நடத்திய கூட்டங்கள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் கீழே கொடுக்கப்படுகின்றன.

இந்த மாநாட்டின் தொடர்ச்சியும் கொடுக்கப்படு கிறது. மாநாடு இரண்டு நாள் மட்டுமே நடத்தப் பட்டது. மூன்றாம் நாள் நடத்தப்பட முடியாததற்குரிய காரணங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன. மாநாடு நடத்தப்பட முடியாதபடி இடையூறு செய்த இந்துத் துவா அமைப்புகளுக்கு ஓர் அறைகூவல் விடப்பட்டுள் ளது. முழுவதையும் நம் வாசகர்கள் வாசித்து அறிந்து கொள்ளவும். பதில் கொடுக்கவும், கீழே கொடுக்கப்படு கின்றன. வாசக அன்பர்கள் இவற்றை வாசித்து விட்டு தங்கள் ஐயங்களை எங்களிடத்தில் எழுப்பலாம்.

1. உலகில் முதல் மொழியும், ஆன்மீக மொழியும் கடவுள் மனிதர்க்குக் கற்றுக் கொடுத்த கடவுளின் மொழியுமாகிய தமிழ் மொழியையும், தமிழ் மொழிக்குச் சொந்தக்காரர்களான தமிழ் இனத்தையும் இழிவு படுத்தி,

2. 'தமிழ் நீசமொழி என்றும் தமிழ் இனம் நீச இனம் என்றும்' இழிவுபடுத்தும் சங்கரமடத்தின் சதியைப் பொதுமக்களுக்குப் புரிய வைப்பதற்காகத் தமிழ்த்தாய் ஆதினம் கடவுளால் உருவாக்கப்படுகிறது.

3. "சங்கரமடத்தின் கொள்கை என்ன?" என்று கேட்டால் "நானே கடவுள்" (அகம் பிரம்மாஸ்மி) என்பதே பதிலாகும்.

4. "அதாவது என்னைத் தவிர வேறு கடவுள் இல்லை" "ஸ்மார்த்தப் பிராமணனாகிய நானே கடவுள்" என்பதாகும். அதாவது கடவுளுக்கு எதிரான ஆணவத்தின் உச்ச நிலையாகும்.

5. "ஸ்மார்த்தப் பிராமணன்" என்றால் விளக்கம் என்ன? என்று கேட்டால், "ஸ்மிருதியைக் கொள்கை யாகக் கொண்ட பிராமணன்" என்று பதில் கிடைக் கிறது.

6. "ஸ்ம்ருதி" என்றால் என்ன? என்று கேட்டால் மனுதர்ம சாஸ்திரம் என்பது பதிலாகும்.

7. "மனுதர்ம சாஸ்திரம் என்பது என்ன?" என்று கேட்டால் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்று 5 பிரிவுகளாகப் பிரித்து, இந்திய மக்களை இழிவுபடுத்தும் வருணாசிரமக் கொள்கை அல்லது சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை என்பதாகும்.

8. அதாவது வெளிநாட்டிலிருந்து இந்திய நாட்டின் மீது படை எடுத்து வந்து ஆண்ட, வெள்ளை நிறமுடைய அந்நியர் பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய 3 மேல் சாதியினர் என்றும், இந்த மேல் சாதியினருக்கு அடிமைப்பட்டு வாழ்வை ஏற்றுக் கொண்டு வாழச் சம்மதித்த இந்தியர் 'சூத்திரர்' அல்லது அடிமைகள் என்றும், வெளிநாட்டினரின் அடிமைத் தனத்தை எதிர்த்த தன்மானமுடைய 5 வது பிரிவினராகிய இந்தியர்களை பஞ்சமர் என்றும், மனுதர்மம் மக்களைப் பிரித்துப் பார்ப்பது ஆகும்.

9. கி.பி.1794 இல் வெள்ளை நிறமுடைய ஆங்கிலேயேர் ஆட்சியில் வில்லியம் ஜோன்ஸ் என்னும் ஆங்கில நீதிபதி, வெள்ளை நிறமுடையவர் பிறப்பால் உயர்ந்தவர் எனக்கூறும் மனுநூல், வெள்ளை நிறமுடைய ஆங்கிலேயர்கள், இந்தியர்களை அடக்கி ஆட்சி செய்ய நன்கு பயன்படும் என்பதை அறிந்து, சமற்கிருதத்தில் இருந்த மனுநூலை ஆங்கிலத்திற்கு மொழி மாற்றம் செய்தான்.

10. மனுநூல் இந்தியர்களின் வாழ்கை முறையைக் கூறும் நூல் என்னும் பொருளில் மனுநூல் கொள்கைக்கு "Hinduism" என்னும் புதிய ஆங்கிலப் பெயரைக் கொடுத்தார்.

11. "Hinduism" என்னும் ஆங்கிலப் பெயர் இந்திய மொழியில் இந்துத்துவா என்று அழைக்கப்படுகிறது.

12. இதனால் "Hinduism is not a Religion but a way of life; it has nothing to do with the concept of God" என்று இந்துத்துவா தலைவர்களாலும், இந்தியாவின் உச்ச நிதிமன்றத்தாலும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

13. மதத்திற்கும் கடவுளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாத அரசியல் கொள்கையையுடைய மனுநூல் கொள்கையைப் பின்பற்றுவதே சங்கரமடம் ஆகும்.

14. அதிலும் "நானே கடவுள்" எனக்கூறும், கடவுளுக்கு எதிரான கொள்கையையுடையதே சங்கரமடம் ஆகும்.

15. கடவுளுக்கு எதிராக, "நானே கடவுள்" எனக் கூறும் சங்கரமடம், தமிழ்நாட்டில் தோன்றிய பக்தி இயக்கத்தின் காரணமாக, தமிழ்நாட்டில், தமிழக மக்களிடையே, தமிழ் மொழியில் உருவான தமிழர் சமயங்களான சைவ வைணவ சமயங்களுக்குத் தலைமை இடமாகக் காட்சியளிப்பது எவ்வாறு? என்னும் கேள்வி எழுகிறது.

16. தமிழ்நாட்டில் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் சேர நாட்டிலுள்ள காலடியில் பிறந்த ஸ்மார்த்தப் பிராமணரான ஆதிசங்கரர், தமிழர் சமயங்களான சைவத்தையும், வைணவத்தையும் சதி முறையில் மனுநூல் கொள்கைக்கு அடிமைப் படுத்தித் வைத உரையை கி.பி. 9ஆம் நூற்றாண்டில் வெளியிட்டார்.

17. சைவ மதத்தின் சின்னமாகிய "திருநீறை" நெற்றியில் அணிந்து கொண்டு, வைணவத்தின் திருப்பெயரான "நாராயணா" என்னும் பெயரை வாயினால் கூறிக் கொண்டு, உள்ளத்தில் சதியை வைத்துக் கொண்டு, தமிழர் சமயங்களான சைவத்தையும் வைணவத்தையும் உருவாக்கிய தமிழ் மக்களை ஏமாற்றினார்.

18. தமிழகத்தை ஆண்ட தமிழ் அரசர்களை ஸ்மார்த்தப் பிராமணப் பெண்களைப் பயன்படுத்தி, தம் கொள்கைக்கு வளைத்து, தம் சதி நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டமையை நாம் வரலாற்றில் பார்க்கிறோம்.

19. பெண்களைப் பயன்படுத்தி ஆட்சியாளர்களை வீழ்த்தும் முறை, ஸ்மார்த்தப் பிராமாணர்களின் அர்த்தசாஸ்திரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளமையும், ஸ்மார்த்தப் பிராமணர்களின், அவர்களுடைய பெண்களுக்கு விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகளும் நமக்குத் தெரிவிக்கின்றன. இவையாவும் கடவுள் கொள்கைக்கு எதிராகச் சொல்லப்படும் சாத்தான் கொள்கையாளர்களின் செயல்கள் ஆகும்.

20. கடவுளுக்கு எதிராக, "நானே கடவுள்" எனக் கூறியுள்ளவர்கள், எந்தச் சதிச் செயலையும் துணிந்து செய்வதில் வியப்பு ஒன்றும் இல்லை.

21. மேலே கூறப்பட்டுள்ள, ஸ்மார்த்தப் பிராமணர்களின், சதிச் செயல் காரணமாக, சங்கரமடங்கள் இந்தியாவில், தமிழர்களின் இந்து மதத்திற்குத் தலைவர்களாக, தவறாக நம்பப்படுகின்றார்கள், நம்ப வைக்கப்படுகின்றார்கள்.

22. இந்திய மக்கள் உள்ளத்தில் இருக்கும் இந்தத் தவறான நம்பிக்கையின் காரணமாக, சங்கரமடங்கள் தமிழ் இனத்தை நீச இனம் என்றும், தமிழ் மொழியை நீச மொழி என்றும் இகழ்ந்து கூறிக்கொண்டு, தமிழ் இன மக்களிடையே நெஞ்சை நிமிர்த்தி நடைபோடும் கொடுமை நடந்து கொண்டிருக்கிறது.

23. இந்நிலையை மாற்றி, உலகின் முதல் மொழி ஆன்மீக மொழி, கடவுள் கற்றுக் கொடுத்த கடவுளின் மொழி என்பதைத் தக்க ஆதாரங்களுடன் நிறுவும் தமிழ்த்தாய் ஆதீனம் உதயமாகிறது. மக்கள் உள்ளங்களில் உள்ள தவறான நம்பிக்கைகளை தகுந்த ஆதாரங்களின் வழி மாற்றி அமைக்கும் ஆதினம் உருவாகிறது. ●

# போதைப் பொருட்கள் ஒழிப்பு!

மனித சமுதாயத்தில் மாணவப் பருவம் என்பது மிகவும் சிறப்பு வாய்ந்த பருவமாகும். ஒரு மனிதனை நல்லொழுக்கத்திலோ அல்லது கேடுபாட்டிலோ நடத்துவது இந்த மாணவப் பருவம் என்று சொல்ல லாம். தற்காலத்தில் இரண்டு விழுக்காடு மாணவர்கள் போதைப் பொருட்களை பாவித்து, போதைக்கு நிரந்தர அடிமையாக இருக்கிறார்கள் என்று, புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. நாம் வாழும் உலகில், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சுமார் 25 கோடிப்பேர் போதைப் பொருட்களுக்கு அடிமையாக இருப்பதாகக் கூறுகி றார்கள். உலக மக்கள் தொகையில் சுமார் நூறு கோடிப்பேர் புகைப்பழக்கம் உள்ளவர்களாக இருக்கி றார்கள் என்கிறது புள்ளி விபரம்.

போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள், பாதிப்புகள், அழிவுகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே ஜூன் 26ஆம் நாள் உலக போதைப்பொருள் ஒழிப்பு நாளாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாளின் முக்கியத்துவம் பற்றி ஒவ்வொருவரும் தெரிந்து வைத்தி ருப்பதும், போதைப் பழக்கத்தை, போதைப் பொருட் களை ஒழிப்பதற்கான செயல்பாடுகளில் நாம் தீவிர மாக இறங்க வேண்டும் என்பதும் அவசியமான ஒன் றாகும்.

உலகத்தில் போதைப் பொருட்களை விற்பனை செய்கிறவர்கள், எண்பது விழுக்காட்டிற்கும் மேலான நாடுகளோடு தொடர்பில் இருந்து கொண்டு போதைப் பொருட்களை விற்பனை செய்து, மனித குலம் மாய்வதற்கு காரணமாக இருக்கிறார்கள். சாதாரணமாக கூலி வேலை செய்பவரில் இருந்து, ஊர்தி ஓட்டிகள், அரசியல்வாதிகள், புகழ்பெற்ற நடிகர், நடிகைகள், தொழிலதிபர்கள், சமூகத்தில் பெரிய மனிதர்களாகக் காட்டிக் கொள்பவர்கள் என்று, பல தரப்பினரும் இந்த மட்டமான போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். காரணம், பணம். “எவன் எக்கேடு கெட்டுப் போனால் நமக்கென்ன, நாம் பணம் சம்பாதிக்க வேண்டும்“ என்ற உயரிய கோட்பாடு உள்ளவர்கள் இவர்கள். இந்த விற்பனை யில் அவர்களின் குடும்பத்தார் போதைப்பொருள் வாங்கி பயன்படுத்தி மாண்டால் ஒழிய அவர்கள் அதை விடமாட்டார்கள் போலும்.

போதைப்பொருள் வணிகத்தில் கோடிக்கணக்கில் பணம் புரளுவதால், சில நாடுகள் போதைப் பொருளைத் தயாரித்து விற்கின்றன. சீனா, துருக்கி, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அதிக அளவில் போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. நேபாளம், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை வழியாக அமெரிக்காவிற்கும் வங்கதேசம், சிங்கப்பூர் ஸ்பெயின், பிரான்ஸ் வழியாக இங்கிலாந்து நாட்டிற்கும் போதைப் பொருட்கள் கடத்தப்படுகின்றனவாம்.

1842ஆம் ஆண்டு, சீனா, இங்கிலாந்து நாடுகளுக் கிடையே போதைப் பொருளான ஓபியம் எனப்படும் அபினை புழக்கத்தில் விடுவதில் எற்பட்ட சிக்கல் போர் நடக்கும் அளவிற்கு சென்றிருக்கிறது. இந்த போர் “ஓபியம் போர்“ என்ற பெயரில் வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது.

போதைப் பொருட்களில் புகையிலையும், மது பானங்களுமே அதிக அளவிற்கு உடல்நலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்கள் அதிகமாக மதுப்பழக்கத்தால் பாதிக் கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். மது அருந்துகிற வர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து கொண்டேதான் போகிறது. 2012ஆம் ஆண்டில் மதுப் பழக்கம் உள்ளோர் 55 விழுக்காடாக இருந்தனர். இப் போதோ அதையும் தாண்டி சென்று கொண்டிருக் கிறது. இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள் மத்தியில் போதைப் பொருட்களை பரப்பி, பணம் சம்பாதிக்கும் சதிகாரக்கூட்டங்கள் எதிர்கால மனித சமுதாயத்தையே அழித்து விடக்கூடியவை. இளைஞர்கள் போதைக்கு ஆட்பட்டு, பின்னர் போதைப் பொருட்களை வாங்கு



வதற்கு கையில் பணம் இல்லாத போது, எந்தவித எதிர்வினைகளையும் ஆய்ந்து பார்க்காமல், குற்றச் செயல்களில் ஈடுபட்டு, வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொள்கிறார்கள்.

இந்திய ஒன்றியத்தைப் பொறுத்தவரை, ஒருவர் ஒரு ஆண்டில், சராசரியாக 33 லிட்டர் மதுபானம் அருந்து வதாகச் சொல்கிறார்கள். ஆண்டுதோறும் மதுப்பழக் கத்தால் 25 இலட்சம் பேர் மாண்டு போகிறார்கள். அதுமட்டுமல்ல, மது அருந்துவோருக்கு அறுபதுக்கும் அதிகமான நோய்கள் வருகின்றன. 20 முதல் 50 விழுக் காடு குடிகாரர்கள், மஞ்சள் காமாலை, வலிப்பு, புற்று நோய் போன்றவற்றாலும் விபத்தாலும் பாதிக்கப் படுகிறார்கள். இது மட்டுமல்லாது, போதையால் பல்வேறு தீய பழக்கங்களுக்கு ஆட்பட்டு, இதய நோய், பால்வினை நோய் போன்ற நோய்களுக்கும் இரையா கிப் போகிறார்கள்.

தமிழகத்தில் அரசே மதுக்கடைகளை நடத்திக் கொண்டிருக்கிறது. சில மாநில அரசுகள், கஞ்சா பயிர் செய்து கிலோ 1500க்கு விற்கிறதாம். அதை கள்ளச் சந்தையில் 50 000 கொடுத்து வாங்குவதற்கும் ஆட்கள் இருக்கிறார்களாம். இந்திய ஒன்றியத்தில் 34 இலட்சம் பேர் ஹெராயின் என்ற போதைப்பொருளுக்கு அடி மையாக இருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த ஹெரா யினால் ஒவ்வொரு நாளும் எழுவர் இறந்து போகி றார்கள்.

இது தவிர்த்து, மதுவின் போதையாலோ, அல்லது மற்ற போதைப் பொருள் பயன்படுத்துவதாலோ, பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பது மிகத் துயரமான செய்தியாகும். 401 போதைத் தடுப்பு, மறு வாழ்வு சிகிச்சை மையங்கள், இந்தியாவில் இருக்கின் றன. இவைகளில் சராசரியாக 8500 நோயாளிகள் இருக்கிறார்கள்.

போதைப்பொருட்களை ஒழிக்க, ஆபத்தான மருந்துகள் சட்டம், போதைப் பொருள் சட்டம், நஞ்சு மருந்துகள் சட்டம், மருந்து, அழகு சாதனப் பொருட் கள் சட்டம் என்று பல சட்டங்கள் இங்கே இருந் தாலும் அவைகள் முறையாக நடைமுறைப் படுத்தப் படுவதில்லை. சட்டங்கள் கடுமைப்படுத்தப்பட்டால் ஓரளவு போதைப் பொருட்களை ஒழிக்க முடியும். குறைந்த அளவு அபராதம், குறைந்த நாள் சிறைத் தண்டனை, சில நேரங்களில் மன்னிப்பு என்று இருப்ப தால் போதைப் பொருட்களை ஒழிக்க முடியவில்லை.

சீன மாகாணங்களான ஹியூமென், ஹூவாடோங் பகுதியை ஆட்சி செய்த லின் செக்கசு என்பவர், அபின் புழக்கத்தை முடக்க கடும் நடவடிக்கை எடுத்தார். சுமார் 200 அபின் வணிகர்களை கைது செய்து 12 லட்சம் கிலோ அபினைக் கைப்பற்றினார். 500 பணியாளர்கள் இணைந்து, 23 நாட்கள் உழைத்து கைப்பற்றிய அபினை, உப்பு, சுண்ணாம்பு கலந்து அழித்து, கடலில் கரைத்தனர். அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையைப் போற்றும் வகையில் ஜூன் 26ஆம் நாளை போதைப் பொருள் ஒழிப்பு நாளாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. 1988ஆம் ஆண்டிலிருந்து இந்த நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த நாள் அறிவிக்கப்படுவதற்கு முன்பதாக, 1987ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை, போதை தடுப்புக் கூட்டத் தொடர் ஒன்றை நடத்தியது. அதில், போதைப் பொருட்கள் தயாரித்தல், கடத்தல், விற்பனை பன்மடங்காக பெருகி வருவதையும் அதன் விளைவாக எழுகின்ற குற்றங்களைத் தடுக்கப் போர்க்கால நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியத்தையும் ஐ நா விவாதித்தது. அதன் பின்னரே போதைப் பொருள் ஒழிப்பு நாள் அறிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் 2007ஆம் ஆண்டின் அறிக் கைப்படி சட்டத்திற்கு புறம்பாக நடைபெற்ற போதைப் பொருள் வணிகத்தின் மதிப்பு ஆண்டொன் றுக்கு சுமார் 320 மில்லியன் டாலராகும். உலகளாவிய காவல் அமைப்புகளுக்கு போதைப்பொருள் கடத்தல் என்பது மிகப்பெரிய சவாலாகவே இதுவரை இருந்து வருகிறது.

அரபு நாடுகள், ஜப்பான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் போதைப்பொருள் தொடர்பான சட்டங்களை மிகக் கடுமையாக கையாள்வதால் அங்கெல்லாம் போதைப்பொருள் விற்பனை கட்டுக்குள் உள்ளது.

பீடி, சிகரெட், சுருட்டு, குட்கா, பான்மசாலா, பீர், பிராந்தி, புகையிலை, மூக்குப்பொடி, சாராயம், ஹெராயின், அபின், காஃபின், கஞ்சா, கோக்கைன், எத்தனால், நிக்கோட்டின், பெத்தனால் ஊசி, போதை தரும் இன்ஹேலர்கள், ஊக்க மருந்து, ஒயிட்னர் போன்ற போதைப்பொருட்கள் முதலில் மனிதனின் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும்.

மூளைக்குச் செல்லும் நரம்புகளைப் பாதித்து நினைவாற்றலைக் குறைக்கும். இதன் காரணமாக சீரான இதயத்துடிப்பு பாதிப்படைந்து இரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. உடலில் ஏற்படும் இத்தகைய பாதிப்புகளால் மனதளவில் தன்னம்பிக்கையை இழந்து விடுகிறார்கள். உடல் சோர்வடைதல், குற்ற உணர்ச்சி, தனிமையை நாடுவது போன்ற அவல நிலைக்கு ஆளாகிறார்கள். போதைப் பழக்கத்தால் உடல் நலத்தையும் இழந்து, குடும்பத்தில், சமுதாயத்தில் மரியாதையையும் இழக்கிறார்கள். தங்களது வாரிசு களுக்கும் நோய்களைக் கொடுத்துவிட்டு, இறுதியாக, தாங்களே மரணத்தை வலிய வரவழைத்துக் கொள்கி றார்கள்.

போதைக்கு அடிமையானவர்களை நாம் கண்டறிந்து, அவர்களுக்கு குடும்பத்தின் சூழலையும், அவர்கள் வாழ வேண்டிய அவசியத்தையும் உணர்த்தி, விழிப்புணர்வு வழங்கி, போதையிலிருந்து வெளிக் கொணர்வதற்கான மையங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று, அவர்களது மறுவாழ்விற்கான உதவிகளைச் செய்வது நம் ஒவ்வொருவரும் சமுதாயக் கடமையாகும்.

**இருங்கோவேள்.**



# மரங்கள்!

ஐ.நா.சபையின் கணக்கெடுப்பின்படி, இந்த பூமியில் 3 லட்சத்து 4 ஆயிரம் கோடி மரங்கள் உள்ளன. ஆனால் மனித நாகரிகம் தோன்றிய காலத்தில் இருந்து இப்போது வரை 46% மரங்கள் வெட்டப்பட்டுவிட்டன.

இப்போதும் ஒவ்வொரு ஆண்டும் இந்த பூமியில் இருந்து 1530 கோடி மரங்கள் காணாமல் போகின்றன. அதே சமயம் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக 500 கோடி மரங்கள் மனித முயற்சியாலும், இயல்பாகவும் வளர்கின்றன, எப்படி பார்த்தாலும் ஓர் ஆண்டில் இழப்பு என்பது சுமார் 1030 கோடி மரங்கள், நாம் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு மரங்களை வளர்க்க வேண்டும் என்பதை இந்த கணக்கு உணர்த்தும்.

மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால் இந்த பூமியில் இருக்கும் ஒவ்வொரு மனிதருக்கும் ஈடாக இங்கு 405 மரங்கள் உள்ளன. இந்த கணக்கீட்டுடன் ஒப்பிட்டால் இந்தியா வின் நிலை மிகவும் பரிதாபம், இங்கு ஒவ்வொரு மனிதருக்கும் ஈடாக வெறும் 28 மரங்கள் மட்டும் தான் உள்ளது.

காடுகள் அனைத்துமே பறவைகள் வன விலங்குகள் மற்றும் நீரோட்டத்தாலும் தான் உருவாகி இருக்கிறது. அதேபோல நாம், நாடு முழுவதும் விதைப்பந்துகளை தூவுவதன் மூலம் ஒரு சிறு மாற்றத்தையாவது உருவாக்க முடியும்.

விதைப்பந்து என்பது இரண்டு வகை மண் மற்றும் சாண எரு கலந்து, அந்த கலவைக்குள் நாட்டு மர விதைகளை வைத்து உருண்டையாக பிடிப்பது தான். விதைப் பந்து களுக்கு மழைநீர் கிடைத்து வளரும் வரை விதைகளும் பாதுகாப்பாக இருக்கும்.

திருமண விழாக்களிலும், பிறந்த நாள் விழாக்களிலும் நம் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் விதைப்பந்து களை நினைவு பரிசாக கொடுக்கலாம்.

# செய்தித்தாள் காகிதத்திற்கு சுங்கவரி!

நடுவண் நிதிநிலை அறிக்கையில், செய்தித்தாள் காகிதம் மீது 10 விழுக்காடு சுங்க வரி விதிப்பு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வறிப்புக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இந்திய பத்திரிகை சங்கத்தின் பொறுப்பு பொதுச் செயலாளர் மேரி பால் இது தொடர்பாக அறிக்கை வெளியிட் டுள்ளார்.

நடுவண் நிதிநிலை அறிக்கையில் பத்திரிகைகள் அச்சடிப்பதற்கான 'நியூஸ்பிரிண்ட்' மீது 10 விழுக்காடு சுங்க வரி விதிக்கப்பட்டுள்ளது. பத்திரிகை அச்சடிப்பதற்குத் தேவை யான செய்தித்தாள் காகிதம் (நியூஸ்பிரிண்ட்), கோட்டிங் செய்யப்படாத காகிதம், பருவ இதழ்கள் அச்சடிப்ப தற்குத் தேவையான எடை குறைவான கோட்டிங் செய்யப்பட்ட காகிதங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள 10 விழுக்காடு சுங்க வரியை திரும்பப் பெற வேண்டும் என்று நடுவண் அரசுக்கு இந்திய பத்திரிகை சங்கம் (தி இந்தியன் நியூஸ் பேப்பர் சொசைட்டி) கோரிக்கை விடுத்துள்ளது.

குறைவான விளம்பர வருவாய், அதிகச் செலவுகள், தொழில் நுட்ப ஜாம்பவான்களான இணையதள கடும் தாக்குதல்களால் செய்திப் பத்திரிகை, பருவ இதழ் வெளியீட்டா ளர்கள் ஏற்கனவே கடும் நிதி நெருக்கடியால் உழன்று கொண்டு இருக்கிறார்கள். சிறிய மற்றும் நடுத்தர பத்திரி கைகள் கடும் நட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

பல பத்திரிகைகள், பருவ இதழ்கள் மூடப்பட வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளன. இந்தியாவில் ஒரு ஆண்டுக்கு செய்தித்தாள் காகித கொள்முதல் 2.50 மில்லியன் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் உள்நாட்டு தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் 1 மில்லியன் டன் ஆகும். கோட்டிங் செய்யப்படாத (பளபளப்பு) மற்றும் எடை குறைவான கோட்டிங் செய்யப்பட்ட (எல்.டபிள்யூ.சி) காகிதங்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் எதுவும் இல்லை. எனவே நடுவண் அரசு அவசரமாக தலையிட்டு தாங்க முடியாத சுமையை ஏற்படுத்தி யுள்ள இந்த சுங்க வரியை ரத்து செய்து இந்திய செய்திப் பத்திரிகைத் தொழிலை காப்பாற்ற வேண்டும் என்று இந்தியப் பத்திரிகை சங்கம் கோரிக்கை விடுக்கிறது.



தொல்லியல், தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க. பாண்டியராஜன் அவர்கள், பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு பற்றி தகவல் தந்தார்.

பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, 32வது வட அமெரிக்கா தமிழ்ச் சங்கப் பேரவை தமிழ் விழா, சிகாகோ 50 வது தமிழ்ச் சங்க ஆண்டு விழா ஆகியவை முப்பெரும் விழாவாக அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் உள்ள சாம்பர்க் கருத்தரங்கு மையத்தில் சூலை நான்காம் நாள் முதல் 7ஆம் நாள் வரை நான்கு நாட்கள் நடக்கிறது. உலகத் தமிழ் ஆராயச்சி மன்றம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் இந்த மாநாடு ஏற்கனவே மலேசியா, இந்தியாவில் தலா மூன்று முறையும், இலங்கை, மொரீசியசு, பிரான்சு நாடுகளில் தலா ஒரு முறையும் நடந்துள்ளது.

கீழடியில நடந்த தொல்பொருள் ஆராய்ச்சி குறித்தும் அமெரிக்க மாநாட்டில் சிறப்பிக்கப்பட இருக்கிறது. 'கீழடியில் தாய்மொழி' என்ற தலைப்பில் நடக்கும் அந்த அமர்வில் தமிழர்களின் தொன்மை குறித்து பேசப்படும். தமிழின் ஆய்வு, மொழி, கலை, பண்பாடு ஆகியவை குறித்த 1150க்கும் மேற்பட்ட கட்டுரைகள் வந்திருந்தன. அதில் 82 கட்டுரைகள் தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றன.

தமிழ் அறிஞர்கள் ஜி.யு.போப், வா.செ.குழந்தைசாமி ஆகியோரை மாநட்டில் நினைவுபடுத்த உள்ளனர். மாநாட்டின் முதல் நாளில் சிறப்பு பட்டிமன்றம், ஈழத்தமிழ் நாட்டியமும் மரபுகளும், தமிழ் இசை சிம்பொனி, இளைஞர் போட்டிகள், குறும்படப் போட்டிகள், இராஜேந்திர சோழன் பற்றிய நாட்டிய நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

ஐந்தாம் நாள் காலை தமிழ் இசை, கல்வியரங்கம், இலக்கிய வினாடி வினா, தமிழ்ச் சங்கங்களின் அணிவகுப்பு நிகழ்ச்சியும், மாலையில் வி.ஜி.பி. தமிழ்ச்சங்கம் சார்பில் சிகாகோவில் திருவள்ளுவர் சிலைத் திறப்பு, இயற்கையில் பிறந்த தமிழ் என்ற தலைப்பில் நாட்டிய நாடகமும் நடைபெறுகிறது. ஆறாம் நாள் காலை உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் முதல் நாள் அமர்வுகளும், மாலையில் பெருவிருந்துடன், நாட்டுப்புற இசை நிகழ்ச்சியும் நடக்கிறது. ஏழாம் நாள் இரண்டாம் நாள் அமர்வுகளுடன் மாநாடு முடிவடைகிறது. இதில் மொத்தம் 35 இணை அமர்வுகளும் நடைபெற இருக்கின்றன. மாநாட்டுக்கு தமிழக அரசு முழு ஆதரவு அளித்து இருக்கிறது. உலகத் தமிழ்ச் சங்கங்களின் மாநாட்டுக்கு ஒதுக்கிய நிதியில் ஒரு பங்கை கொடுக்க முதல்அமைச்சர் சொல்லி இருக்கிறார். அரசு சார்பில் நானும் கலந்து கொள்ள இருக்கிறேன். மேலும் 25 பேர் பங்கு பெற இருக்கிறார்கள்.

தமிழினம், தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் தொன்மை, தற்கால இலக்கியம் குறித்து புதுவரலாற்றின் நோக்கிலும், அறிவியல் அடிப்படையிலும் ஆய்வு செய்ய வேண்டும் என்பது இந்த மாநாட்டின் மையப்பொருளாக வைக்கப்பட்டு இருக்கிறது என்றார்.



# உறுப்பினர் சேர்ப்பு?




பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர்கள் சேர்க்கை தொடங்கியிருக்கிறது. உள்துறை அமைச்சர் அமித்சா ஐதராபாத்தில் தொடங்கி வைக்கிறார். வராணாசியில் பிரதமர் மோடி துவக்கி வைக்கிறார். இப்படி நாடெங்கும் பாஜக நிறுவனர் தலைவர் சியாமா பிரசாத் முகரிசியின் பிறந்த நாளான சூலை 6இல் பாசக உறுப்பினர் சேர்க்கை தொடங்கியிருக்கிறது. இதில் குறிப்பிடத்தக்கது என்ன தெரியுமா? இந்த உறுப்பினர் சேர்க்கை என்பது பேருந்து நிலையங்களிலும் இரயில்வே நிலையங்களிலும் தொடங்கப்படுகிறது என்பதுதான் கவனிக்கத்தக்கது.

இந்த இரு பொது இடங்களிலும் ஆயிரக்கணக் கான பொதுமக்கள் கூடுவார்கள். அத்தகைய இடங்களைத் தேர்ந்தெடுத்து, பெரிய பதவிகளில் இருப்பவர்கள் உறுப்பினர் சேர்க்கையைத் தொடங்கி வைக்கின்றனர் என்றால், இதைவிடக் கடைந்தெடுத்த கோமாளிக் கூத்து வேறு ஒன்று இருக்க முடியுமா? பிரதமர், உள்துறை அமைச்சர் போன்றவர்கள் உறுப்பினர் சேர்க்கையைத் தொடங்கி வைக்கின்றனர் என்றால் கூடியிருக்கும் பொது மக்கள் போட்டி போட்டுக் கொண்டு உறுப்பினர்களாக சேரத்தான் செய்வார்கள்.

பிஜேபி என்றால் என்ன? அதன் கொள்கை யாது? கடந்த காலத்தில் அதன் நடவடிக்கை எத்தகையது, என்பது பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளாமலும், அதுபற்றிய அக்கறையோ, சிந்தனையோ இல்லாமலும், பிரதமர் வந்திருக்கிறார். உள்துறை மந்திரி வந்திருக்கிறார். அவர் முன் கட்சியில் சேரலாம் என்ற ஆர்வத்தோடு ஒரு கட்சியில் உறுப்பினராவதை விடக் கேலிக் கூத்து வேறு ஒன்று இருக்க முடியுமா?

கேட்டால் பிஜேபிதான் தார்மீகமும், கோட்பாடும் நிறைந்த கட்சி என்று பீற்றிக் கொள்வார்கள். நடைமுறையில் கட்சிக்கு ஆள் சேர்ந்தார் சரி, அவர் யாராக இருந்தால் என்ன என்பது மதிக்கத்தகுந்தது தானா? இப்பொழுதுகூட நாடாளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் குற்றப் பின்னணி என்றால் சாதாரணமானதல்ல. கொலை, கொள்ளை என்பது போன்ற குற்ற வழக்குகள்.

தமிழ்நாட்டில் கூட ஒரு வழிமுறை பின்பற்றப் பட்டது பிசேபியின் மாநிலத் தலைமையால் ‘மிஸ்டு கால்’ மூலம் பிசேபிக்கு உறுப்பினர்கள் சேர்த்தார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தோழர் இரா. முத்தரசன் அவர்களுக்கே அப்படியொரு

மிஸ்டுகால் என்றால், இவர்கள் கட்சிக்கு உறுப்பினர்கள் சேர்க்கும் இலட்சணத்தை என்ன வென்று சொல்லுவது!

கட்சியின் கொள்கைகள், இலக்குகள் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அதற்கான விண்ணப்பப் படிவம் தயாரித்து அந்த விண்ணப்பத்தின் ஒரு பக்கத்திலோ அல்லது தனியாகவோ கட்சியின் கோட்பாடுகளையும் குறிப்பிட்டிருக்க வேண்டாமா?

எந்த நியாயமான வழிமுறைகளும் இல்லாமல் தெருவில் போவோர், வருவோரிடமும், பேருந்து நிலையங்களிலும், இரயில் நிலையங்களிலும், வெளியூர் செல்லக் காத்திருப்போர் மத்தியில் படிவத்தை நீட்டி 'போடு கையெழுத்து' என்று சொல்லவதெல்லாம் அக்கட்சியின் தரத்தையும் பண்பாட்டையும் தான் பறை சாற்றும்.

அதில் கூட பிஜேபிக்குத்தான் உறுப்பினர்களைச் சேர்ப்பார்களே தவிர, அக்கட்சியின் தாய் நிறுவனமான ஆர்.எஸ்.எஸ் இல் உறுப்பினர் சேர்க்கை என்பதே கிடையாது.

அது ஒரு மதவெறி அமைப்பு என்பதாலும் வன்முறையில் ஈடுபடுவதாலும் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள உறுப்பினராக இல்லாமலிருப்பது வசதி என்று கருதியதுதான்.

காந்தியாரைப் படுகொலை செய்த நாதுராம் கோட்சே பச்சையான ஆர்.எஸ்.எஸ் தான் என்றாலும் அதில் உறுப்பினர் சேர்க்கை இல்லாத காரணத்தால் ஆர்.எஸ்.எஸ். இல்லை என்று கூறித் தப்பிக்க முடிந்தது. அது ஒரு திட்டமிட்ட தந்திரமான ஏற்பாடே!

ஆர்.எஸ்.எஸ். இல் உறுப்பினர் சேர்ப்பு என்ற நடைமுறை இருந்திருந்தால் கோட்சே ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்தவன்தான் என்பதை எளிதில் ஆதாரத்துடன் கையும் களவுமாகக் கண்டுபிடித்திட முடியுமே.

ஆர்.எஸ்.எஸ்.இன் அரசியல் வடிவமான பிசேபி தேர்தலில் நிற்க வேண்டிய அவசியத்தால் உறுப்பினர் சேர்க்கை என்பதை தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகி விட்டது.

திராவிடர் கழகம் உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டிருக்கும் இதே காலகட்டத்தில், பிசேபியும் உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டு இருப்பது எப்படியோ அமைந்து விட்டது. ஆனால், திராவிடர் கழகத்தில் நுழைவுக் கட்டணம் செலுத்தி விட்டதாலேயே யாரும் உறுப்பினர் ஆக முடியாது. கொள்கைக் கோட்பாடுகள் அடிப்படையில்தான் திராவிடர் கழகத்தில் உறுப்பினராக முடியும். எண்ணிக்கை முக்கியம் அல்ல இலட்சியத் தெளிவே அடிப்படை புரிந்து கொள்க!

***கலி பூங்குன்றன்,*** *திராவிடக் கழகம்.*



**மே 17**

இந்தியா இலங்கைக்கு ராடார் கொடுத்ததை நேரடியாகவே ஒத்துக் கொண்டார் மன்மோகன் சிங்.

"வாஜ்பாய் இல்லை என்றால் எங்களால் புலிகளுக்கு எதிரான போரைத் துவக்கி இருக்கவே முடியாது. நிதி, ஆயுதம், பயிற்சி என பல வழிகளில் எங்களுக்கு உதவினார்!"

தற்போதைய இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே, வாஜ்பாய் இறந்த போது அங்கே இருக்கும் இந்தியத் தூதரகத்தில் அவரின் படத்திற்கு அஞ்சலி செலுத்திவிட்டு அவர் எழுதிய வரிகள் இவை.

2002இல் ஈழம் கிடைத்துவிட்டது என்று நாம் அனைவரும் தென் திசையை நோக்கிக் காத்திருந்த போது அதை நாசம் செய்தது அப்போதைய பாசக அரசு.

இப்போ, காங்கிரசை தனியாக, பாசக வை தனியாக திட்டி தேர்தலுக்குத் தேர்தல் ஓட்டுப் பொறுக்கினா போதுமா? இல்லை ஒட்டு மொத்தமா இந்தியாவை குற்றவாளின்னு சர்வதேசத்துக்கு நிறுவி, நடந்தது இனப்படுகொலைதான் என மற்ற நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமா?

மே 17 இயக்கம் இரண்டாவதைத்தான் கடந்த பத்து ஆண்டுகளாகச் செய்து வருகிறது. புலிகளை ஆழமாக சிறுவயது முதலே நேசிப்பவர்களுக்கும், ஈழ விடுதலையை மனதார எதிர் நோக்கியிருப்பவர்களுக்கும் இது நன்றாகவே தெரியும்.

ஈழத்தை தன் சுய தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் பச்சோந்திகளுக்கு இதெல்லாம் தெரிய வாய்ப்பில்லைதான!

**மே 17 இயக்கம்**

# கரும்புலிகள் உருவாக்கத்தின் பின்னணி...!

கரும்புலிகள் என்ற வார்த்தைப் பிரயோகம் உலகளாவிய ரீதியில் ஒவ்வொருவராலும் பேசப்படும் சக்திமிக்கதொரு சொற்பதமாகிவிட்டது. கரும்புலித் தாக்குதலை நடாத்தும் விடுதலைப்புலி உறுப்பினர் களின் பிரமிப்பூட்டும் தியாகங்கள், உலக சமுதாயத்தை அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தி வருகின்றன. மனிதன் பிறந்ததே வாழ்வதற்காகத்தான். அப்படியா னால் இறப்பதற்காகவே களம் புகும் இக்கரும்புலிகள் யார்?

ஈடு இணையற்ற இவர்களது ஈகமும் மன ஓர்மமும் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது? என்பன போன்ற கேள்விகளுக்கான விடைகளானது மானிட ஆய்வாளர்கள் மத்தியில் ஆராய்ச்சிக்குரியன வாகிவிட்டன.

இன்னும் உலககெங்குமுள்ள அடக்குமுறை யாளர்கள் தங்களுக்குள் கைகோர்த்தபடி, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க விழையும் மக்களை மிருகத்தனமாக அடக்கி ஒடுக்க முனைகின்றனர். இவர்களிடம் ஆள், ஆயுத பலம் உண்டு. ஆட்சி அதிகாரம் உண்டு. தொழில் நுட்ப வலுவுண்டு. இவற்றை தேவைப்படும் இடங்களுக்கு, தேவைப்படும் நேரங்களில் கொடுத்து, போராட்ட சக்திகளை பலம் இழக்கச் செய்து, தமது அடக்கு முறைகளை வலுப்படுத்துகின்றனர். இந்த நவீன அடக்கு முறையாளர்களுக்கு ஈடு கொடுக்கக் கூடிய அளவிற்கு ஆள் ஆயுத தொழில் நுட்பத் திறன் களைப் போராட்ட சக்திகள் கொண்டிருப்ப தில்லை.


மிகக் குறைந்த அளவில் இவர் களுக்கு இருக்கும் போராட்டத் திறன் களில் இருந்த மிக உச்ச பயன்களைப் பெற்றாலொழிய போராட்டச் சக்கரத்தை ஓர் எல்லைக்கப்பால் நகர்த்த முடியாது. எனவே ஒடுக்கு முறையாளர்களின் நாடியை ஒடுங்கச் செய்யும் அளவுக்குஇ பல்வேறு திசைகளில் இருந்தும் வெவ்வேறு வடி வங்களில் போர்ச்சக்கரம் நகர்த்தப்பட வேண்டும்.

இந்தப் போர் வடிவங்களுக் குள்ளே உயர்ந்ததும், உன்னதுமானது மான விடுதலைப் புலிகளின் போர் வடிவம்தான் கரும்புலித் தாக்கு தலாகும். தன்னை இழந்து அல்லது எதிரிகள் பலரை அல்லது எதிரியின் பலமிக்கதொரு இலக்கை அழிக்கக் கூடிய படையணி ஒன்றை அமைக்கும் யோச னையை, தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஆரம்பத்தில் இருந்தே கொண்டிருந்தார்.

அந்த எண்ணக் கருவை செயற்படுத்தக்கூடிய ஆற்றலை விடுதலைப்புலி வீரர்கள் மத்தியில் சிறுகச் சிறுக ஏற்படுத்திக் கொண்டு வந்தார். பின்னர் 'ஒப்ரேசன் லிபரேசன்' என்ற பெயருடைய இராணுவ நடவடிக்கை மூலம் வடமராட்சிப் பகுதியை ஆக்கிரமித்த சிங்களப் படைகள் வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தன. இதன் மூலம் சிங்கள இராணுவத்திற்கு உளவியல் ரீதியான போரிடும் ஆற்றல் திடீரெனக் கூடியது. சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளை அழித்து விடலாம் எனத் திமிருடன் சிந்திக்கத் தொடங்கியது.

இதே சமயம், அந்த இராணுவ நடவடிக்கை காரணமாக பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து, மற்றைய பகுதிகளுக்கு சென்றதுடன், அந்த திடீர் நடவடிக்கையால் மக்கள் குழம்பியும், போராட்ட வெற்றியில் நம்பிக்கை இழக்கக் கூடிய, சூழலும் தோன்றியது. இந்தச் சூழ்நிலைகளில்தான் ஒரு கரும்புலித்தாக்குதலை நடத்த தமிழ் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் முடிவெடுத்து அதற்கான ஆயத்தங்களைச் செய்தார்.

1987 ஆம் ஆண்டு சூலை மாதம் ஐந்தாம் நாள், நெல்லியடி மத்திய மாகவித்தியாலயத்தில் அமைக்கப் பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள் முதலாவது



கரும்புலி வீரன் புகுந்து அம்முகாமை சின்னா பின்னமாக்கினான்.

சிங்கள அரசையும் அதன் இராணுவ இயந்திரத் தையும் கிலி கொள்ளச் செய்த அந்த முதலாவது கரும் புலித் தாக்குதல், கட்பன் மில்லர் செய்து முடித்தான். அன்றிலிருந்து பல கரும்புலித் தாக்கு தல்கள் நிகழ்த்தப்பட்டுவிட்டன. அதில் பல கரும்புலிகள் வீரச்சாவு அடைந்து உள்ளனர்.

ஒவ்வொரு விடுதலைப்புலி வீரனும், வீராங் கனையும் சாவைச் சந்திக்க தயாரான நிலையில்தான் இருக்கிறார்கள். ஆனால் தங்களுடைய சாவு எப்போது வரும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

போர்க்களத்திற்குச் செல்லும் போது திரும்பி வருவேன் என்ற நம்பிக்கையுடன்தான் ஒரு விடுதலைப்புலி வீரன் செல்கிறான். சில வேளை அவர் அங்கே சாவை சந்திக்கலாம் அல்லது திரும்பி வரலாம்.

ஆனால், கரும்புலிகள் நிலை வேறுபட்டது. களம் புகுவதற்கு பல நாட்கள் முன்னமே தங்களுடைய சாவைத் தெரிந்து கொண்டு விடுகிறார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப் போகிறேன் என்ற உண்மையை பூரணமாகத் தெரிந்து கொண்டுதான் கரும்புலிகள் வெடிமருந்தை தங்களுடன் கொண்டு செல்கிறார்கள்.

இராணுவ முகாம்களில் இருக்கும் பலநூறு எதிரிகளின் கரங்களில் இருந்து முழங்கிக் கொண்டி ருக்கும் துப்பாக்கிகளை கருத்தில் எடுக்காது, உடைந்து நொருங்கிப் போய் கிடக்கும் பாதை வழியே சீராக, நிதானமாக வெடிமருந்து வண்டியை ஓட்டிச் சென்று, எதிரி முகாமின் இதயத்திற்குள்ளே புகுந்து, தன்னையும் சேர்த்து வெடிக்கச் செய்வதென்பது சாதாரண விடயமல்ல.

இயல்பாகவே அச்சமூட்டும் அலைகளைக் கொண்ட அகண்ட சமுத்திரத்திற்குள், நடு இரவில், எதிரியின் நவீன காவற் கருவிகளையும் புத்தி சாதுரியமாக மீறி, வெடி மருந்து படகுடன் உட்புகுந்து எதிரியின் கப்பலை நெருங்கி முன்னரே தீர்மானிக்கப் பட்ட இலக்கை இனங்காண்பதற்காக ஒரு முறை கப்பலைச் சுற்றி வந்து, குறித்த இலக்கின் மீது மோதி, வெடிமருந்து படகுடன் சேர்ந்து வெடித்துச் சிதற ஒரு மனித மனம் உடன்படாது.

இவைகள் ஒரு சாதாரண வீரனால் செய்யப்பட முடியாதவை. இதை செய்வதற்கென்றொரு ஆத்மீக பலம் தேவை. தன்னை தற்கொடை செய்து கொள்ளத் தயாரான மனோதிடம் வேண்டும். தனது இறுதி நேரத்திலும் கூட பதற்றம் இன்றி, உறுதியுடன் குறி பிசகாது எதிரியைத் தேடி ஓடும் வீரம் தேவை. விரக்தி காரணமாகவோ, முள்ளாள் தனமாகவோ தன்னை அழித்துக் கொள்ள தற்கொலை முயற்சியை போலல்ல இது. அல்லது எதிரியின் கண்ணோட்டத்தின்படி கொடூரம் மிக்கதும் மானிட இனமாக இல்லாததுமான ஒரு பூதம் அல்ல. இது அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒரு தேசிய இயக்கச் சக்திக்கு உந்து விசையாக விளங்கும் உயரிய போர் வடிவம்தான் எங்களது கரும்புலிகள்.

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றி கொள்ளப் பட முடியாததும், உலகின் எந்த தொழில் நுட்பத்தாலும் தடுக்க முடியாததும், உலகின் எந்த அரசு இயந்திரத்தாலும் அடக்க முடியாததும்தான் எங்களது கரும்புலிகளின் மனோபலம்.

இந்த மனோபலம் வீர உணர்வை வெளிப்படுத்தும் ஒரு குறியீடு மட்டுமல்ல. எமது சமுதாய எண்ண வோட்டத்தில் பிரளயத்தை ஏற்படுத்தப் போகும் சக்தி கொண்ட ஒரு அரசியல் வடிவமுமாகும்.

ஒவ்வொரு கரும்புலியும் தனது உயிரைப் போக்கிக் கொள்ளும்போது நிகழும் பூகம்பம், தமிழீழ விடுதலைப் போராட்டச் சக்கரத்தை முன்னோக்கி தள்ளிவிடு வதுடன் வீரம்மிக்க, யாருக்கும் அடிபணியாத, அடக்க நினைப்பவரை நடுங்க வைக்கும் ஆற்றல் கொண்ட தமிழ்ச் சமூகத்திற்குத் தேவையான உணர்வையும் ஊட்டி விடுகின்றது.

தேச மக்களிடம் பக்தியையும் வீர உணர்வையும் அடித்தளமாகக் கொண்ட இத்தகைய மனோபலம் எமது மக்களிடம் இருக்குமாக இருந்தால், உலகில் எவரும் எம்மை எதுவும் செய்ய முடியாததுடன், சுதந்திரத்திடனும் கௌரவத்துடனும் வாழும் பலத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

பல நூற்றுக்கணக்கான விடுதலைப் புலி வீரர்கள் தங்களைக் 'கரும்புலி' அணியில் இணைத்துக் கொண்டு இருக்கின்றனர்.

ஒவ்வொரு முறையும் கரும்புலித்தாக்குதலுக்கான தீட்டம் தீட்டப்படும்போது, தன்னைத்தானே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு வீரனும், வீராங்கனையும் முண்டியடிக்கிறார்கள்.

அலையலையாக கரும்புலித்தாக்குதலுக்குத் தயாராகும் இந்த தியாகச் செயலை உலகில் எங்குமே காணமுடியாது.

இது உலக அதிசயங்களில் புதியதொன்றாகும்.


களம்புகும் கரும்புலிகளின் பிரமிப்பூட்டும் வீரச் சாதனைகள், ஆளும் வர்க்கத்திற்கு கிலியை உண்டு பண்ணுகின்ற அதே சமயம், அந்த உன்னதமான அர்ப்பண உணர்வு ஏற்படுத்தும் சமூகத் தாக்கம், தமிழீழக் குடிமக்களின் மனதில் இருக்கும் சுதந்திர ஒளியை இன்னும் வளர்த்துச் செல்லும் என்பது உறுதி.

உயிராயுதத்திலிருந்து...

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

**சைதை மணிமாறன்.**

# குறும்பட போட்டி மற்றும் திரையிடல் விழா சிக்னிஸ் தமிழ்நாடு மற்றும் மாதா தொலைக்காட்சி இணைந்து நடத்தும் ஒன்பதாம் ஆண்டு சிறப்பு குறும்படப் போட்டி 2019




2019 ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22ஆம் நாள் தர்மபுரியில் நடக்க இருக்கும் சிக்னிஸ் (அகில உலக கத்தோலிக்க ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பு தமிழ்நாடு நடத்தும் தமிழ்நாடு ஒன்பதாம் ஆண்டு சிறப்பு குறும்பட போட்டிக்கு உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.

அனுமதி இலவசம், படைப்புகள் சமூகநல கருத்து கொண்டிருத்தல் வேண்டும்

பரிசுகள் விவரம்:

**முதல் பரிசு : ரூ.15,000**

**இரண்டாம் பரிசு : ரூ. 10,000**

**மூன்றாம் பரிசு : ரூ. 5000**

***போட்டி விதிமுறைகள்:***

1. ஒருவர் எத்தனை படங்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

2. படைப்புகள் 2D, 3D கார்ட்டூன், அசையும் பிம்பங்களாக (Creative Animation வும் இருக்கலாம்.

15 நிமிடங்களுக்குள் மட்டுமே தங்களின் குறும்படம் இருக்க வேண்டும்.

3. சிறந்த மூன்று படங்களுக்கு மேற்கண்ட மூன்று பரிசுத்தொகையும்,

போட்டியில் திரையிட தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து படைப்புகளுக்கும் சிறப்பு குறும்பட போட்டி 2019 சான்றிதழ்களும் வழங்கப்படும்.

4. போட்டியில் கலந்துக்கொண்ட சிறந்த படைப்புகளை 22.08.2019 அன்று தர்மபுரியில் நடக்க இருக்கும் சிக்னிஸ் தமிழ்நாடு ஆண்டு விழாவில் திரையிட்டு, படைப்பாளிகளுக்கு பாராட்டு விழாவும் பரிசுத்தொகைகளும் அன்றே வழங்கப்படும். வெற்றி பெற்ற போட்டியாளர்கள் நேரில் வந்தால் மட்டுமே பரிசுத்தொகை தரப்படும்.

5. நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

6. போட்டிக்காக அனுப்பப்பட்ட எந்தப்படைப் பையும் திருப்பி அனுப்ப இயலாது.

மேலும் இக்குறும்படங்கள் மாதா டிவியில் மட்டுமே ஒளிபரப்பப்படும்.

**படைப்புகளுடன் இணைத்து அனுப்ப வேண்டியவை :**

1. படைப்பாளிகளின் பெயர் உள்ளிட்ட முழு விபரம், தொடர்பு முகவரி மற்றும் உடன் பணியாற்றிய தொழில்நுட்பக் கலைஞர்கள் பற்றிய தகவல்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ, அல்லது அஞ்சலிலோ அனுப்பி வைக்கலாம்.

2. படைப்புகளை DVD யாக 2 பிரதிகள் அனுப்பி வைக்க வேண்டும்.

3. படைப்பு தொடர்பாக எந்தப் பிரச்சனை எழுந்தாலும், அதன் படைப்பாளியே முழுப்பொறுப் பேற்க வேண்டும். அதற்கான உறுதி மொழிக்கடிதத் தையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

4. படைப்புகள் வந்து சேர வேண்டிய இறுதித் தேதி 16.08.2019

**படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

ஒருகிணைப்பாளர், மிர்த் மீடியா மையம், 218/தி 3 பஞ்சநாதன் தெரு, குப்தா நகர், அங்கம்மாள் காலனி, சேலம் 636009. மேலும் விவரங்களுக்கு, 9952667395 திரு. லியோபால், செயலர்/பொருளர் சிக்னிஸ் தமிழ்நாடு.

**கவிஞர் கெங்கைகுமார்,**

நுங்கு மாற்று ஊடக இயக்கம்.







# நீட் தேர்வால் தொடரும் தற்கொலைகள் தீர்வு என்ன?

அனிதா மரணத்தின் துயரமே மறையாத நிலையில் நீட் தேர்வினை எழுதி அதில் குறைவான மதிப்பெண்கள் அல்லது தேர்வாகாததால் 3 மாண விகள் தமிழகத்தில் உயிரை மாய்த்துக் கொண்டுள்ள னர். தன்னையே தீ வைத்துக்கொண்டு எரித்த பட்டுக் கோட்டை மீன் வியாபாரியின் மகள் வைஸ்யா என்ற மாணவியின் உணர்வுகள் எப்படிப்பட்டவை? அவரின் கனவு, ஆசைகள் எப்படிப்பட்டதாக இருக்கும்? மருத்துவராக வேண்டும் என்ற கனவு மண்ணாய்ப் போனதே என்ற விரக்தி அவர்களை தற்கொலைக்கு தூண்டியிருக்கிறது என்றால் அதற்கு யார் காரணம்? தற்கொலைக்கு தூண்டுவது தண்டனைக்குரிய குற்றம் என்கிறது சட்டம். தற்கொலைகளுக்கு காரணமான மத்திய மாநில அரசுகள் தண்டிக்கப்பட வேண்டாமா?

தமிழக மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட மருத்துவக்கல்லூரிகளின் இடங்கள் தமிழ் மாணவர் களுக்கு தகுதி இல்லை என்று மறுக்கப்பட்டு பணம் படைத்தவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. இரு ஆண்டுகளுக்கு முன்னர் நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்ற சட்டசபை தீர்மானம் குடியரசுத்தலைவரின் அலுவலகத்தில் தூங்கிக் கொண்டு இருக்கிறது என்றால் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டதாக சொல்லிக்கொள்ளும் சட்ட சபைக்கு எந்த மதிப்பும் இல்லை என்பது மீண்டும் மீண்டும் நிருபிக்கப்படுகிறது.

12ஆம் வகுப்பில் எடுத்த மதிப்பெண்கள் எல்லாம் வீண் நுழைவுத்தேர்வின் அடிப்படையில் எடுக்கும் மதிப்பெண்களே மருத்துவராகும் தகுதியை தீர்மானிக் கும் என்ற நீட் தேர்வே பெரும்பான்மை மாணவர்களை மருத்துவப்படிப்பில் இருந்து துரத்துவதையே நோக்க மாகக் கொண்டது. பல லட்சங்கள் இல்லாமல் நுழைவுத்தேர்வில் சேர்வதே சாத்தியமில்லை சாதாரண, எளிய குடும்பத்தில் பிறந்த ஒருவருக்கு மருத்துவராக வேண்டும் என்ற எண்ணம் இனியும் அறவே வரக்கூடாது என்பதுதான் மோடி அரசின் திட்டம்.

துப்பட்டா போடக்கூடாது, முழுக்கை சட்டைப் போடக்கூடாது, கம்மல் போடக்கூடாது என்று அனைத்தையும் அவிழ்த்துப்பார்க்கும் கொடூரத்தை ஏற்றுக்கொண்டு வேறென்ன செய்ய முடியும் என்று அமைதியாக நாம் இருக்கும் வரை இப்படிப்பட்ட படுகொலைகள் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கும், மொத்த கல்வியே இன்றைக்கு கார்ப்பரேட்டுகளுக்காக தாரைவார்க்கப்பட்டு சாதிக்கு ஒரு நீதி, குலக்கல்வித் திட்டம், இந்தித்திணிப்பு என காவியமயமாக்கப் பட்டுக்கொண்டு இருக்கிறது.

இது ஏதோ கல்வித்துறையில் மட்டுமல்ல, மீத்தேன், ஹைட்ரோகார்பன், கெயில் என திட்டமிட்டு தமிழினத்தை ஒழிப்பதற்கான மோடி அரசின் திட்டங் களில் ஒன்றாகத்தான் நீட் தேர்வு கொண்டு வரப்பட்டு பலி வாங்கிக் கொண்டு இருக்கிறது.

அனைத்துத் தரப்பு மாணவர்களுக்கும் மருத்துவக் கல்வி பாரபட்சமின்றி கிடைக்க நீட் தேர்வு இரத்து செய்யப்பட வேண்டும் என்றால் நீட்க்காக இனி எந்த உயிர்ப்பலியும் தமிழகத்தில் நிகழக்கூடாது.

நீட் உள்ளிட்ட தமிழகத்தின் மீதான அடக்கு முறைகளை இரண்டில் ஒன்று பார்ப்போம்! அடக்கு முறைகள் வென்றதாக வரலாறில்லை!

**மருது**
செய்தித் தொடர்பாளர்
மக்கள் அதிகாரம்
9962366321



# அணுக்கழிவு மையமா? உயிரை அழிக்கும் மையமா?

**சுப. உதயகுமாரன்,** அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்

அணு உலையிலிருந்து உயர்தரக் கழிவு, நடுத்தரக் கழிவு, கடைத்தரக் கழிவு என்று மூன்று வகைக் கழிவுகள் உருவாகின்றன. அணு உலைகளில் பயன்படுத்தப்படும் யுரேனிய எரிகோல்கள் தொடங்கி பணியாளர்களின் கையுறைகள், காலணிகள் வரை எல்லாமே கதிர்வீச்சை வெளியிடுவதால் அல்லது கதிர்வீச்சுக்குள்ளாகி இருப்பதால், அவற்றை பிற திடக் கழிவுகள் போல கண்ட இடங்களில் வீசியெறிய முடியாது.

இந்தியாவில் அணு உலைகளிலிருந்து வெளிவரும் திரவக்கழிவுகளை பெரும்பாலும் கடலுக்குள்ளேயே விட்டுவிடுகிறார்கள். ஆனால் அணு உலைகளில் எரிக்கப்பட்ட எரிகோல்கள் போன்ற உயர்தரக் கழிவுகள் மிக அதிக கதிர்வீச்சுத்தன்மை கொண்டவையாக, மிகவும் ஆபத்தானவையாக இருப்பதால், அவற்றை மிகக் கவனமாகக் கையாண்டு, மிகவும் கண்ணும் கருத்துமாக போற்றிப் பாதுகாத்தாக வேண்டும். ஆயிரம் மெகாவாட் மின்சார தயாரிக்கும் ஓர் அணு உலையில், ஆண்டொன்றுக்குச் சராசரியாக 27ஆயிரம் கிலோ எடையுள்ள எரிக்கப்பட்ட எரிகோல்கள் வெளிவரும். இவற்றைப் பாதுகாக்க 'எரிகோல் சேமிப்புத் தேக்கம்' ஒன்று அணுஉலைக் கட்டிடத்துக்குள்ளேயே அமைக்கப்படுகிறது. அதில் ஏழு இயங்கு ஆண்டுகளில் எரிக்கப்பட்ட எரிகோல்களை மட்டுமே சேமித்து வைக்க முடியும்.

பின்னர் அந்தக் கழிவுகளை பாதுகாப்பான இடத்துக்கு மாற்றியாக வேண்டும் அந்த எரிகோல் கழிவுகளைப் பாதுகாத்து வைப்பதற்கு 'அணுஉலைக்கு அகலே' எனும் அமைப்பு கட்டப்படுகிறது. அணுக் கழிவுகளின் அளவு அதிகரிக்கும்தோறும், அவற்றை சேமித்துவைக்கும் கிட்டங்கிகளின் தேவை யும் அதிகரிக்கிறது. அணுக்கழிவுகளை மறு சுழற்சி செய்தாலும் கழிவுக் கிட்டங்கிகளின் தேவை அதிகரிக்கத்தான் செய்யும். இந்த உயர்தரக் கழிவுகள் தங்களின் கதிர்வீச்சுத் தன்மையில் பாதியை இழப்பதற்கே 24 ஆயிரம் ஆண்டுகள் பாதுகாக்கப்பட வேண்டிய உயர்தர அணுக்கழிவுகளை ஆழ்நிலக் கருவூலம் ஒன்றில் மட்டுமே பத்திரமாகப் பாதுகாக்க முடியும். இந்த 'ஆழ்நிலக் கருவூலம்' ஒன்று இதுவரை இந்தியாவில் உருவாக்கப்படவேயில்லை. இதற்கான தொழிற்

**ஓர் அணுஉலையில் எழும் ஆபத்துக்களைப் போலவே 'அணுஉலைக்கு அகலே' அமைப்பிலிருந்தும் பெரும் அபாயங்கள் எழும். எனவே இது நிலநடுக் கங்களால் பாதிக்கப்படாத வகையில் அமைக்கப்பட வேண்டும். இதிலிருந்து கசியும் தண்ணீரும், வெளி யேறும் காற்றும் மிகுந்த நச்சுத்தன்மை கொண்டவை**

நுட்பம் தங்களிடம் இல்லை என்று அணு சக்தித் துறை உச்சநீதிமன்றத்திடம் எழுத்துப் பூர்வமாகவே ஒத்துக் கொண்டிருக்கிறது.

2011-2014 காலகட்டத்தில் கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிரான இடிந்தகரை போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது, கூடங்குளம் அணுக் கழிவுகளை கர்நாடக மாநிலம் கோலாரில் உள்ள பயன்பாட்டில் இல்லாத பழைய தங்கச் சுரங்கங்களில் புதைப்போம் என்று 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய அணுசக்தித் துறை அறிவித்தது.

அப்போதைய முதல்வர் ஜெகதீஷ் செட்டரும் காங்கிரஸ் கட்சியின் மத்திய மந்திரி வீரப்ப மொய்லியும் கோலாரில் மட்டுமல்ல, கர்நாடகத்தில் எங்கேயும் புதைக்க விடமாட்டோம் என்று போர்க்கொடி தூக்கினார்கள். மேற்குறிப்பிட்ட கட்சிகளும், கர்நாடக மாநில அதிமுகவும் இணைந்து நடத்திய மூன்று நாள் போராட்டத்தினால், அந்தத் திட்டம் உடனே கைவிடப்பட்டது. கோலாருக்கு மாற்றாக அப்போது மத்திய இணை அமைச்சராக இருந்த நாராயணசாமி கூடங்குளம் அணுஉலைக் கழிவுகள் கூடங்குளத் திலேயே சேமித்து வைக்கப்படும் என்று அறிவித்தார்.

கூடங்குளம் அணு உலை தொடர்பான வழக்கு ஒன்றின் தீர்ப்பில் உச்சநீதிமன்றம் 15 நிபந்தனை களோடு அணுஉலை செயல்படுவதற்கு அனுமதி அளித்தது. அவற்றுள் முக்கியமான ஒரு நிபந்தனை அணுக்கழிவுகளை பாதுகாக்கும் 'அணுஉலைக்கு அகலே' அமைப்பை 5 ஆண்டுகளுக்குள் ஏற்படுத்தியாக வேண்டும் என்பது, அந்த நிபந்தனையை நிறைவேற்று வதற்கான காலக்கெடு 2018 மார்ச் மாதம் முடிவடைந்த நிலையில், 'பூவுலகின் நண்பர்கள்' அமைப்பினர் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் மீது வழக்குத் தொடுத் தனர். உச்சநீதி மன்றம் கூடங்குளம் அணுஉலையில் 2022 ஏப்ரல் 30ஆம் தேதிக்குள் 'அணுஉலைக்கு அகலே' அமைப்பு கட்டப்பட வேண்டும் என்று ஆணையிட்டது.

அதற்கான ஆயத்த வேலைகளை மத்திய அரசும், அணுசக்தித் துறையும், தமிழக அரசும் தற்போது தொடங்குகின்றன. இதற்கான கருத்துக்கேட்பு கூட்டம் ஜூலை 10 அன்று ராதாபுரத்தில் வைத்து நடக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இதன் தொடர்புடைய அறிக்கைகளை, தகவல்களை மக்கள் அனைவரும் அறியும் பொருட்டு இணையத் தில் பதிவேற்றவில்லை. பத்திரிகைகளில் வெளியிட வில்லை.

கூடங்குளம் அணுஉலை வளாகம் 5.40 கி.மீ. நீளமும், 2.5 கி.மீ. அகலமும் கொண்டது. இந்த 13.5 சதுர கி.மீ. பரப்பில் ஆறு முதல் எட்டு அணுஉலைகள், அணுக்கழிவு மறுசுழற்சி ஆலை உப்பகற்றி ஆலைகள் நிர்வாக அலுவலகங்கள் என அனைத்தையும் சேர்த்து அடர்த்தியாகக் கட்டுவது மிகவும் ஆபத்தானது.

12 அணுஉலைகளுக்கும், 34 அணுஉலைகளுக்கும் இடையே வெறும் 804 மீட்டர் இடைவெளிதான் இருக்கிறது. அதேபோல, 34 அணுஉலைகளுக்கும் 56 அணு உலைகளுக்கும் இடையே அதைவிடக் குறை வாக 344 மீட்டர் தூரம்தான் உள்ளது. இப்படிப் பட்ட நெருக்கடியான சூழலில் 'அணு உலைக்கு அகலே' அமைப்பை இதே வளாகத்தில் கட்டுவது உள்ளூர் மக்களுக்கும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியா குமரி மாவட்ட மக்களுக்கும் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழகத்துக்கும், கேரளத்துக்கும் பெரும் கேடுகளை, ஆபத்துக்களை உருவாக்கும்.

ஓர் அணுஉலையில் எழும் ஆபத்துக்களைப் போலவே 'அணுஉலைக்கு அகலே' அமைப்பிலிருந்தும் பெரும் அபாயங்கள் எழும். எனவே இது நிலநடுக் கங்களால் பாதிக்கப்படாத வகையில் அமைக்கப்பட வேண்டும். இதிலிருந்து கசியும் தண்ணீரும், வெளி யேறும் காற்றும் மிகுந்த நச்சுத்தன்மை கொண்டவை. இங்கே உருவாகும் கதிர்வீச்சைக் கண்காணிக்க, பராமரிக்க சிறப்பு அறைகள் அமைக்கப்படுகின்றன. 'பட்ட இடத்திலேயே படும், கெட்ட குடியே கெடும்' என்பதுபோல, ஆறு மிகப்பெரிய அணுஉலைகளை மட்டுமல்லாமல் அவற்றிலிருந்து வெளிவரும் அணு உலைக் கழிவுகளையும் தமிழ் மக்கள் தலைகளில் கட்டுவது என்ன நியாயம்.

கூடங்குளத்தில் தயாரிக்கப்படும் மின்சாரம் 5 தென் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆனால், இங்கே உருவாகும் அணுக்கழிவுகளை எந்த மாநிலமும் ஏற்றுக் கொள்ள முன்வராமலிருப்பது என்ன நீதி? நாற்பது முதல் அறுபது ஆண்டுகள் இயங்கும் அணு மின் நிலையங்களையே கேரளா, குஜராத், மேற்கு வங்கம் போன்ற பல மாநிலங்கள் கடுமையாக எதிர்க் கும் நிலையில், 48ஆயிரம் ஆண்டுகள் அணுக்கழிவு களைப் புதைத்து வைக்கும் 'ஆழ்நிலக் கருவூலம்' ஒன்றை ஏற்றுக் கொள்ள எந்த மாநிலமும் முன்வராது.

இந்தியாவில் 'ஆழ்நிலக் கருவூலம்' ஒன்று கட்டப் படாத நிலையில், இந்தியாவின் அனைத்து அணு உலைகளிலிருந்தும் வெளிவரும் அணுக்கழிவு களை கூடங்குளத்திற்கு கொண்டு வந்து கொட்டி விடு வார்கள் என்று தமிழக மக்கள் அஞ்சுகிறார்கள். தமிழகம் அழிவுத்திட்டங்களின் புகலிடமா? இந்தியா வின் குப்பைத் தொட்டியா? என்ற அவர்கள் கேட்கும் கேள்வி நியாயமானதுதானே?

நன்றி : **தினத்தந்தி**



# வேலை வாய்ப்பு?

ஏன் தமிழ்நாட்டில் உள்ள அரசு வேலைகள் எல்லாம் வட இந்தியர்களுக்கு செல்கிறது காரணம்

***யார் தமிழர்***

என்று கேட்கும் வேற்று இனத்தவருக்கு பதில் சொல்லும் சட்டநாதன் ஆணையம்

1956ல் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பின்னர் கர்நாடகாவில் கன்னடத்தை தாய்மொழி யாகக் கொண்ட கன்னடச் சாதிகள் மட்டுமே மாநில பட்டியல்களில் இடம்பெற்றது, கன்னடர் மட்டுமே அரசு வேலை மற்றும் அரசாங்கப் பிரதிநிதிகளாக இருக்க வகை செய்தது கர்நாடகம். அங்கு உள்ள பட்டியல்களில் எந்தவொரு தமிழ்ச்சாதிகளும் இடம் பெற முடியாது. தாழ்த்தப்பட்டவர் இட ஒதுக்கீட்டில் கன்னடர் அல்லாத பிறமாநில தாழ்த்தப்பட்டோருக்கு இடமில்லை.

அவ்வாறே ஆந்திராவில் தெலுங்கைத் தாய் மொழி யாகவும் கேரளாவில் மலையாளத்தை தாய்மொழி யாகவும் கொண்டவர்கள் மட்டுமே அந்தந்த மாநில பட்டியல்களில் இடம் பெற வகை செய்யப்பட்டது.

இதே நிலைபோல் தமிழகத்திலும் தமிழச்சி சாதிகளை மட்டுமே பட்டியல்களை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை முன் வைத்து அதன் அடிப்படையில் "சட்டநாத ஆணையம்" 1972இல் மு. கருணாநிதி தலைமையிலான தி.மு.ஆட்சியின் போது நீதிபதி சட்டநாதன் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டு அனைத்து பட்டியல்களில் உள்ள தமிழ்ச்சாதிகளை இனம் கண்டு புதிய பட்டியல் உருவாக்குவதற்கான திட்டம் வகுக்கப்பட்டது.

சட்டநாதன் ஆணையம் அனைத்து பட்டியலில் உள்ள தமிழ்ச்சாதிகளைத் தனியாகப் பிரித்தெடுத்து, அந்தந்தச் சாதிகளைப் பற்றிய முழு விவரங்களையும் தொகுத்து ஆங்கிலத்தில் 300 பக்கங்களை கொண்ட அறிக்கையைத் தமிழக அரசிடம் சமர்ப்பித்தது.

அனைத்து பட்டியல்களிலும் தமிழ்ச் சாதிகளை மட்டுமே கொண்ட அந்த அறிக்கையில் தனது சாதியான "சின்ன மேளம்" (இசைவேளார்) என்ற தெலுங்குச் சாதி இடம் பெறாதது கண்டு அதிர்ச்சி அமைந்த மு. கருணாநிதி அறியாமையில் பெரும் பிழை செய்து விட்டோமே என அஞ்சி சட்டநாதன் ஆணையத்தின் அறிக்கையை அப்படியே கிடப்பில் போட்டு இருட்டடிப்புச் செய்துவிட்டார்.

தற்போது இருக்கக்கூடிய அனைத்து பட்டியல் களிலும் ( SC,ST,BC,MBC) தமிழர்களுக்கு கிடைக்க வேண்டிய பதவிகளை தமிழர்கள் இருக்கக்கூடிய இடங்களில் அந்நிய மொழியினரான தெலுங்கர்களும், கன்னடர்களும், மலையாளிகளும், மார்வாடிகளும், சௌராட்டிரர்களும், இந்தியர்களும்தான் வலுவாக அமர்ந்து கொண்டு வசதியாக வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்.

இடத்தை பறிகொடுத்த தமிழர்கள் ஏமாளிகளாகத் தேர்வு எழுதிக்கொண்டே தெருவில் திரிகிறார்கள்.

ஆகையால் தமிழ் மக்களின் நலன் கருதி மீண்டும் நமக்குரிய அதிகார பங்கினை மீட்டெடுக்க "சட்ட நாதன் ஆணையத்தை" தமிழகத்தில் நடைமுறைப் படுத்த தமிழர் அமைப்புகள் அனைத்தும் இந்த போராட்டத்தை வீரியத்துடன் முன்னெடுத்து போராட வேண்டும்.

தமிழ்நாட்டில் தலித் அரசியல் பேசுவோர் தமிழர் நலனில் கவனம் செலுத்தமாட்டார்கள், தாழ்த்தப் பட்ட தமிழரை ஒரு குறிப்பிட்ட சதவீத வாக்குகளா கவே பார்ப்பார்கள்.


தமிழர் அல்லதோரின் நலனுக்காக கட்சி கண்ட திராவிட அரசியல் கட்சிகளும் இதை கண்டுகொள் ளாது. திராவிட இயக்கம் இந்த தமிழர் உரிமை மறுப்பை ஆதரித்து சட்டநாதன் ஆணையத்தையே இனவாதம் என்று கருத்தாக்கம் செய்ய துணியும்.

தமிழ்த்தேசிய அரசியலில் மட்டுமே இந்த தமிழர் உரிமையும் நிலைநாட்டப்படும். யார் தமிழர் என்று கேட்கும் வேற்று இனத் தவருக்கு இனி சட்டநாதன் ஆணையம் சமர்ப்பித்த பட்டியல் தான் பதில்.

# நம்ம தமிழ் வார்த்தைகளை
# எப்படி எல்லாம் மாற்றியிருக்கிறார்கள் தெரியுமா?

குடமுழுக்கு கும்பாபிஷேகமாகிவிட்டது
அருள்மிகுவை சிறீயென ஆக்கி
கருவறையை கர்ப்பகிரகமாக்கி
நீரை ஜலமாக்கி
தண்ணீரைத் தீர்த்தமாக்கி
குளியலை ஸ்நானமாக்கி
அன்பளிப்பை தட்சணையாக்கி
கதிரவனை சூரியனாக்கி
வணக்கத்தை நமஸ்காரமாக்கி
ஐயாவை ஜீயாக்கி
நிலத்தை பூலோகமாக்கி
வேளாண்மையை விவசாயமாக்கி
மழையை வருணணாக்கி
வேண்டுதலை ஜெபமாக்கி
தீயை அக்னியாக்கி
குண்டத்தை யாகமாக்கி
காற்றை வாயுவாக்கி
விண்ணை ஆகாயமாக்கி
பூவை புஷ்பமாக்கி
பூசனையை பூஜையாக்கி
முறைகளை ஆச்சாரமாக்கி
படையலை நெய்வேத்தியமாக்கி
திருமணத்தை விவாகமாக்கி
பிள்ளைப்பேறை பிரசவமாக்கி
பிணத்தை சவமாக்கி
மக்களை ஜனங்களாக்கி
உணர்வற்றதை சடமாக்கி
ஒன்பதாம் நாளை நவமியாக்கி
பத்தாம் நாளை தசமியாக்கி
பிறந்தநாளை ஜெயந்தியாக்கி
பருவமடைதலை ருதுவாக்கி
அறிவைப் புத்தியாக்கி
ஆசானைக் குருவாக்கி
மாணவனை சிஷ்யனாக்கி
அறிவியலை விஞ்ஞானமாக்கி
படிப்பித்தலை அப்பியாசமாக்கி
பள்ளிகளை வித்யாலயமாக்கி
அவையை சபையாக்கி
கலையை சாஸ்திரமாக்கி
இசையை சங்கீதமாக்கி
ஓவியத்தை சித்திரமாக்கி
ஆடலை நடனமாக்கி
ஆடையை வஸ்திரமாக்கி
அழகை சுந்தரமாக்கி
முகத்தை வதனமாக்கி
முடியை கேசமாக்கி
உறக்கத்தை நித்திரையாக்கி
உண்மையை சத்தியமாக்கி
நல்லதை புண்ணியமாக்கி
கெட்டதை பாவமாக்கி
கொடையை தர்மமாக்கி
அமிழ்தை அமிர்தமாக்கி
நஞ்சை விஷமாக்கி
சான்றை ஆதாரமாக்கி
பெரியதை மஹாவாக்கி
சிறியதை சோட்டாவாக்கி
செருப்பை ரட்ஷையாக்கி
ஊர்வலத்தை உற்சவமாக்கி
பயணத்தை யாத்திரையாக்கி
உலகத்தை லோகமாக்கி
மாட்டைக் கோமாதாவாக்கி
மூத்திரத்தை கோமியமாக்கி
என்னைச் சூத்திரனாக்கி
என் உறவை பஞ்சமனாக்கி
இருக்கிறார்கள்.
நாமும் தலையாட்டிக் கொண்டு
அவற்றைப் பயன்படுத்துகிறோமா?

**லோகநாயகி**



# மனிதம் தேடி

தொட்டில் பழக்கம்
சுடுகாடு மட்டும்
மனிதம் சிறுவயது
முதலே வரவேண்டும்
மனிதத்தை பள்ளியிலும்
வீட்டிலும் வளர்க்க வேண்டும்
சுயநலத்தால் மனிதாபிமானம்
அழிந்து போகிறது!
பேரழிவின் போது
மனிதம் துளிர்க்கிறது!
மனிதனை மாற்றி
இயற்கையை அழித்து
என்ன செய்யப்
போகிறது உலகம்!
தருமவிதிகளைப் படித்து
நடக்கிறோமா இல்லையே!
மனமது சொல்லும்
பாதையில் செல்கிறோம்!
மனிதத்தை வளர்த்திடுவோம்!
மாற்றத்தைச் செய்திடுவோம்!

**வாணியம்பாடி. தியாகராசன்**

# ஆரிய மாதாவாகிறாரா தமிழன்னை?

முனைவர் ந.க.மங்களமுருகேசன்



தமிழை அன்னையாகத் தமிழ்த் தாயாகப் போற்றும் மரபு திராவிட மரபு. இதைக்கூடப் பொறுத்துக் கொள்ளாத ஆரியக் கூட்டம் ஒரு முறை இனமானப் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களிடம் நக்கலாகக் கிண்டலாக, "தமிழ்த்தாய், தமிழ்த்தாய் என்கிறீர்களே, தமிழ்த் தாய் எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டது.

இனமானப் பேராசிரியர் சட்டென்று அக்கேள்வி கேட்டவர்களின் முதுகெலும்பை முறிக்கும் பதிலை இப்படிச் சொன்னார். "ஆம்! தமிழ்த்தாய் இருக்கிறாள், உங்கள் பாரதத்தாயின் வீட்டிற்குப் பக்கத்தில்" என்று பதிலைச் சொன்னார்.

தமிழைத் தாயாக உருவகம் செய்வதை முதன் முதலில் நிறுவியவர் மனோன்மணீயம் சுந்தரனார். இதனை 1891 ஆம் ஆண்டில் அவர் தமிழ்த்தாய் வாழ்த்தில் "எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே" எனக் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் தமிழ்த்தாய்க்கு உள்ள ஒரே ஆலயம் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உள்ளது. மற்ற கோயில்களைப் போல் அல்லாது சித்திரை மாதப் பிறப்பின் போது கம்பன் விழாவின் ஆண்டு நிறைவு விழாவில் திறந்து வைக்கப் பெறுகிறது.

ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு சனவரி 1981 இல் மதுரையில் நடைபெற்றபோது அன்றைய முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் தமிழ்த்தாய்க்குச் சிலை ஒன்றை மதுரை தமுக்கம் மைதானத்தில் நிறுவினார்.

தமுக்கம் மைதானத்தில் நிறுவிய தமிழ்த்தாய் அமர்ந்த நிலையில் தாமரை மலர்மீது அபயகஸ்த முத்திரையில் சுவடிகள் ஏந்தித் தோன்றுகிறார். 2013 மே மாதத்தில் அன்றைய முதல்வர் செல்வி செயலலிதா தமிழ்த்தாய்க்கு 100 கோடி ரூபாய் மதிப்பில் 300 அடி உயர தமிழ்த்தாய் சிலையினை அமெரிக்காவின் விடுதலைச் சிலை போன்று நிற்கும் வடிவில் மதுரை வண்டியூரில் நிறுவிட உள்ளதாக அறிவித்தார்.

அண்ணா திமுக அரசினர் இந்தச்சிலை வடிக்கும் பொறுப்பினைப் பூம்புகார் நிறுவனத்திடம் அளித்தனர். இந்நிறுவனம் வெளியிட்ட அறிவிப்புதான் தமிழ்த்தாயை ஆரியத்தாயாய் ஆக்கும் முயற்சி.

நம்முடைய கேள்வி இதுதான்! மதுரையில் நிறுவ உள்ள சிலை தமிழ் அன்னை சிலையா? ஆரிய மாதாவா? தமிழக அடிமை அரசு திருவாளர்

## பண்டைத் தமிழ்ச் சிற்பக்கலை மரபின் அடிப்படையில் இல்லாமல் வேத பிராமண மரபில் இருக்கும் என்பது கடுமையான கண்டனத்திற்கும், எதிர்ப்புக்கும் உரியது மட்டுமல்லாமல், இந்தச் சிலை நிறுவப்பட்டால் தமிழன்னை இல்லாமல் ஆரிய மாதா என்பதால், சென்னை ஸ்பென்சர் அருகே இருந்த "நீல் சிலை ஒழிப்புப் போராட்டம்" என்ற போராட்டம் போல் - தமிழ் உணர்வாளர்கள் "ஆரிய மாதா சிலை ஒழிப்புப் போராட்டம்" நடத்த வேண்டிய நேரிடும்

பழனிச்சாமி அரசு தமிழ் அன்னையின் சிலையை வேத 'பிராமண' பாணியில் நிறுவ இருக்கிறது. இது பண்டைத் தமிழ்க் கட்டடக்கலை மரபிற்கு எதிரானது. இந்தச்சிலை அமைக்கும் நோக்கத்தை வெளியிட்டவர் ஜெயலலிதா. இந்தச் சிலை அமைக்கும் பணியினைத் தமிழக அரசு பூம்புகார் நிறுவனத்திடம் ஒப்படைத்து உள்ளது. அந்நிறுவனம் . அதனை ஏற்ற நிறுவனம், அந்தச் சிலையை வேத பிராமண இந்து மரபுப்படி உருவாக்க இருப்பதாக அறிவித்து உள்ளது.

தமிழ்நாட்டு வரலாறு, தமிழ் நாட்டுச் சமுதாய பண்பாட்டு வரலாறு படித்தவன் என்ற அடிப் படையில், 38 ஆண்டுகள் வரலாற்றுப் பேராசிரியராக பணியாற்றிவன், 185 நூல்களுக்கு மேல் எழுதியவன் என்ற முறையில் கூறுகிறேன் பூம்புகார் நிறுவனத்தின் இந்த அறிவிப்பு பண்டைத் தமிழ்ச் சிற்பக்கலை மரபின் அடிப்படையில் இல்லாமல் வேத பிராமண மரபில் இருக்கும் என்பது கடுமையான கண்டனத்திற்கும், எதிர்ப்புக்கும் உரியது மட்டுமல் லாமல், இந்தச் சிலை நிறுவப்பட்டால் தமிழன்னை இல்லாமல் ஆரிய மாதா என்பதால், சென்னை ஸ்பென்சர் அருகே இருந்த "நீல் சிலை ஒழிப்புப் போராட்டம்" என்ற போராட்டம் போல் தமிழ் உணர்வாளர்கள் "ஆரிய மாதா சிலை ஒழிப்புப் போராட்டம்" நடத்த வேண்டிய நேரிடும். தமிழ் மரபு என்பது வெண்கலத்திலோ, கருங்கல்லிலோ சிலை வடிப்பது.

ஆரிய வடநாட்ட மரபு சிலைகளைப் பளிங்கு அல்லது சலவைக்கல்லில் வடிப்பது ஆகும். அதனாலேதான் தமிழ் நாட்டில் சீரடி சாயி பாபாவிற்கு நிறுவியுள்ள சிலைகள் எல்லாம் கருங்கல்லில் செதுக்காமல் பளிங்குக் கல்லில் செதுக்கி இருப்பதைச் சான்று கூறலாம். இந்தச் சிலையைக் கண்ணாடி இழை, கண்ணாடியால் செய்யப் போவதாக கூறியிருப்பது மரபிற்கு மாறானது. அது மட்டுமல்ல, இந்தப் பூம்புகார் நிறுவனம், குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல் குழியைப் பறித்தது போல் இத்தாலியிலுள்ள சிலைகளின் மாதிரியில் அமைக்கப் போகிறார்களாம். ஆகவே தமிழக பழனிச்சாமி அரசு படைக்கப் போவது ஆரிய மாதா கூட இல்லை, இத்தாலிய அன்னை!

இது போன்ற அவலங்கள், கொடுமைகள் எல்லாம் அதிமுக ஆட்சியில் தான் அரங்கேறும்.

தமிழர்களின் சிற்பக்கலை உலகின் புகழ்பெற்ற சிற்பக்கலை. இதற்கு எடுத்துக்காட்டாக இன்றம் விளங்கி வருபவை தஞ்சைப் பெரிய கோயிலும், கங்கை கொண்ட சோழபுரம் கோயிலும் ஆகும்.

ஆக, பூம்புகார் நிறுவனத்தின் வேதியப் பார்ப்பன இந்து மரபில் தமிழ்த்தாய் சிலை உருவாக்கும் அறிவிப்பு தமிழக அஇஅதிமுக அரசு இந்துத்துவா வெறி கொண்ட மையத்தில் ஆளும் பிஜேபி மோடி அரசின் கைப்பாவை அரசு, அடிவருடி அரசு, சுயமரியாதை, தமிழ் உணர்வு இல்லாத அரசு என்றே காட்டுகிறது.

தமிழ் உணர்வாளர்களே, விழித்துக் கொள்வோம்! தமிழக அரசின் இம்முயற்சியைத் தடுத்து நிறுத்துவோம்!!

நன்றி : **விடுதலை**



**விளம்பர கட்டண விபரம்**

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**

**பின்னட்டை ரூ.** 10,000/- **(முழுப்பக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ.** 5,000/-




# திருக்குறள் குறித்து ... பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆரியர் பரிமேலழகர் முதல் இன்றைய அறிஞர்கள், தமிழர்கள் வரை ஆயிரக்கணக்கானோர் திருக்குற ளுக்கு உரையெழுதினாலும், மிகச்சரியான நுண்ணோக் குப் பார்வையோடு தமிழியநலத்தைப் பேணும் பண்போடு மிகத்துல்லியமான உரையைத் தந்தவர் நம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தாம் என்பதை அவையிலுள்ள சான்றோர் பெருமக்கள் எவரும் மறுக்க முடியாது.

திருக்குறள் குறித்துப் பாவலரேறு ஐயா சொல்லியுள்ளார்..

திருக்குறள் ஓர் இனமீட்புநூல். அதில் தமிழியல் வாழ்க்கை சொல்லப்பட்டிருக்கிறது. அதில் தமிழியல் அறம் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் தமிழியல் பண்பு சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தத் தமிழினம் நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பே தோன்றிய இந்த நம் மூத்தகுடி ஒரு படிநிலை வளர்ச்சிபெற்றுக்கலையியல் பண்பாட்டியலில் வளர்ந்து, நாகரிகமுற்று, மொழியிலிலே, இலக்கியத் தன்மையிலே, அரசியல் தன்மையிலே, பொருளியல் தன்மையிலே வளர்ச்சிபெற்று ஒரு பெரிய சிறந்த வாழ்வினமாக இருந்தது.

இந்த இனத்தை வீழ இருந்த நிலையிலே, இந்த இனத்தின் நல்லியல் புகழை, நல்லியல் கூறுகளை, அரசியல் கூறுகளை, வாழ்வியல் கூறுகளை, உண்மை யியல் கூறுகளை, மெய்யியல் கூறுகளை ஒன்றாக ஓரிடத்திலே குவித்துக்காட்டி, வருங்காலத் தமிழினத் திற்கு அவற்றை வழிகாட்டியாக ஆக்க வேண்டும் எனும் நோக்கத்தோடு திருவள்ளுவர் எழுதிய நூல் தான் திருக்குறள்".

"நம்முடைய தமிழிலக்கிய வரலாற்றிலே காணப் பெறுகின்ற புலவர்கள் அனைவரும் ஒரு பணியும் செய்யாதவர்கள்."

"எந்த வேலையும் செய்யாதவர்கள், எந்தப் புலவராவது எங்காவது வேலைசெய்ததாக எந்தக் குறிப்புமில்லை"

"திருவள்ளுவர் ஒருவர்தாம் வேலைசெய்து பொருளீட்டிக் கூலிபெற்று வாழ்ந்து கொண்டிருந்த தாக நமக்கு வரலாறு கிடைத்திருக்கிறது. அரசமுறைப் பணியை அவர் செய்தார். செய்தி அறிவிப் பாளராக அவர் இருந்தார் என்று சொல்லுகிறபோது அவருடைய நுலைப்பார்க்கிறபோது அவர் அந்தப் பணியைச் செய்துகொண்டு, அதனால் வந்த வருவாயைப் பெற்றுப்பிழைத்திருக்கிறாரே தவிர, அவருடைய புலமையை விற்றுப்பிழைக்கவில்லை."

எந்த அரசரையாவது திருவள்ளுவர் பாராட் டியிருக் கிறார் என்ற ஒரு பாட்டைக் காட்ட முடியாது. எந்த அரசரும் திருவள்ளுவரைப் பாராட்டியதாக ஒரு செய்தியையும் காட்ட முடியாது.

ஏனென்றால், நம்முடைய புலவர்கள் வரலாற்றிலே திருவள்ளுவர் ஒருவர்தான் வேறு கோணங்களிலே கருத்துகளைச் சொன்னவர்.

இயல்பான எல்லாப் புலவர்களும் இலக்கியங் களைப் பாடிக்கொண்டிருந்தபொழுது,

அகவியல் பாடல்களையும், புறவியல் பாடல் களையும் அரசர்களின் மேல் ஏற்றிச் சொல்லிக் கொண்டிருந்தபொழுது அவற்றிற்காகப் பரிசுகளையும், பெருமைகளையும் வாழ்வியல் நலன்களையும் பெற்றுக் கொண்டிருந்தபொழுது இந்தத் தமிழின மக்களுக் காகப் பல வரலாற்று நிகழ்ச்சிகளை அவர்கள் என்றென்றும் நினைவிலே வைத்திருக்கவேண்டும் என்பதற்காக, முற்றிலும் அப்பொழுதிருந்த இலக்கிய வழக்குக்கு மாறுபட்ட நிலையில் ஒரு நூலைச் செய்திருக்கிறார் திருவள்ளுவர்.

ஓர் இனத்தின் வரலாற்று நிலையிலே, ஏதோ ஒரு வகையிலே தன் நிலையைத் தமிழினம் இழந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்துதான் திருவள்ளுவர் திருக்குறளைப் பாடினார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

**பாவலரேறு**
**தேன்தமிழ்ப்பாசறை,**
உடுமலைப் பேட்டை.

# அருட்கவிஞர் துக்காராம்



மகாராட்டிரம் வீரம் செறிந்த பூமி. சத்திரபதி சிவாஜி முகலாய பேரரசினை எதிர்த்து வாகை சூடினார். தனியரசாகச் செயல்பட்டார். அம் மாநிலத்தில் வீரர்களுக்கு இணையான ஞானியர்களும் இடையறாது தோன்றி னர். மக்களின் ஆன்மீக ஒளிக்கு வழி கோலினர். அலைபாயும் மனம் அமைதி யடைய அருமருந்தான பாடல்களை பாமரரும் பாடி நல்வழி களில் தொடர்ந்து ஈடுபடச் செய்தனர். மராட் டிய மொழியில் செம்மாந்த பாடல்கள் பாடிய அருளாளர்கள் பலர் அவர் களின் குறிப்பிடத்தக்கவர்கள் வருமாறு :

ஞானசுவர், தாசபோதர், நானக் சைதன்யா, இராமனந்தர், கபீர் நாச்சி மேதா, சத்திதாசர், ஜயதேவர், துளசி தாசர், கபீர் மீராபாய், புரந்தர தாசர், ஏகநாதர், துக்காராம் ஆகியோர்.

கி.பி. 1600 வாக்கில் முஸ்லீம் ஆட்சியாளர்கள் தக்காணம் பகுதியைக் கைப்பற்றினர். தக்காணப் பகுதி முழுவதும் மிகவும் குழப்பமான சூழல். இந்நிலையில் சமயத்துறையில் ஒரு விடிவெள்ளி தோன்றியது. புனேக்கு அருகேயுள்ள தெகு என்ற ஒரு சிறிய கிராமத்தில் கி.பி.1608ஆம் ஆண்டில் துக்காராம் பிறந்தார். அவர் குடும்பம் சமுதாயத்தின் நன்மதிப்பைப் பெற்ற குடும்பமாகும். போஸ்ஷோமா காண்டு என்ற பெற்றோருக்குப் பிறந்தவர் ஆவார்.

குடும்பத்தில் மூன்று ஆண் குழந்தைகள் இரண்டு பெண் குழந்தைகள் ஆக ஐவர் ஆவர். துக்காராம் அவர்களுக்கு இரண்டாவது மகனாவார். துக்காராமின் குடும்பப் பெயர் மொரே. அது இறைவன் தோத் திரப் பெயர். அவருடைய முன்னோர் கள் கோசாவிகள் என்பவர்கள். குடும் பத் தொழிலான விவசாயத்தில் ஈடு பட்டு தன் கடமைகளைத் தவறாது செய்து வந்தார்.

துக்காராமின் பதினேழாம் ஆண் டில் அவருடைய பெற்றோர்கள் இறந்து விட்டார்கள். இளமைப் பருவத்தி லேயே ருக்மா என்ற மங்கையை

சித்தாந்த ரத்தினம் வி.டி.இராமகிருஷ்ணன்

மணந்து கொண்டார். அவர் மூலம் ஒரு மகனும் பிறந்து விட்டான். அவளோ ஒரு மூச்சு இறைப்பு (அஸ்துமா) நோயாளி.

அவர் காலத்தில் நர்மதை நதிக்குத் தெற்கேயும் மேற்கிலேயும் கொடுமையான வறட்சி ஏற்பட்டது. மழை பொய்த்துப் போய் விட்டது. ஆடுமாடுகள் மடிந்த வண்ணம் இருந்தன. இந்நிலையில் அவருடைய வாழ்க்கை சோதனைக்கு மேல் சோனையாக அமைந்தது. பார்த்து வந்த பயிர்த்தொழிலும் பாழானது. வாழ்க்கையில் பல பயங்கரமானவை ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ந்து நடைபெற்றன.

பதினோறாம் வயதில் பெற்றோர்களை இழந்த பின் அடுத்து தன்னுடைய இரண்டாம் அண்ணனின் துணைவியார் காலமானார். அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாத அண்ணன் வீட்டை விட்டு வெளியேறி பிச்சையெடுத்து துறவியைப் போல் திரிந்து காணாமல் போய்விட்டார். அடுத்தது அவருடைய முதல் மனைவி ருக்மா உணவின்றி உயிர் துறந்தார். இறக்கும் தறுவாயில் பசியின் கொடுமையால் சோறு சோறு என்று கத்திக் கொண்டே உயிரை விட்டாள். வறுமையின் எல்லை மீறிய அளவில் ஒருவரை ஒருவர் விழுங்கும் நிலை ஏற்பட்டது. பாசம் அற்றுப் போனது. மகன் உடலைத் தின்னும் கொடுமை. ஊனுக்காக உயிரை வாங்கும் கொடுமை.

**துக்காராம் தன்னுடைய முக்திக்காக சமயம் ஒன்றை எற்றுக் கொண்டாரில்லை. மனித குலம் முழுவதற்கான துன்பத்தைத் துடைக்க வந்த ஒன்றாக சமயத்தை கருதினார். தூய உள்ளத்திற்கு எவ்வித அறிவுரையும் தேவையில்லை. ங்கள் எண்ணம் போக்கில் சில மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இப்போது உங்களுக்குக் கிடைத்திருக்கும் வாழ்வு இனி என்றும் திரும்பப் போவதில்லை. உடம்மைப் போர்த்தியிருக்கும் புறத் தோலைக் கழுவதைத் தவிர என்ன செய்தீர்கள் நீங்கள்.**

இக்கொடுமைகளைக் கண்ட துக்காராம் மன அமைதியை இழந்தார். வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளலாரைப் போல கண்ணீர் விட்டு அழுதார். அதைக் கண்ட மக்கள் யாரை யார் ஆற்றுவது? யாரை யார் தேற்றுவது என, கூனி குறுகி நின்றனர். அதைக் கண்டு சகியாது துயரம் தோய்ந்த சொற்களில் பதிவு செய்தார்.

“தெய்வமே மன்பதையே திடீரென்று மறைந்து போயிற்றோ நான் பார்க்க சகியேன்“ என்று நெஞ்சுருகும்படி புலம்பினார். வாழ்க்கையின் பிடிப்புத் தளர்ந்தது. வாழ வேண்டும் என்பதற்காக வாழ்ந்தார். கடுமையாக உழைத்தார். அவருடைய அப்பாவித் தனத்தை பயன்படுத்தி அவரை ஏமாற்றினார்கள்.

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார். அவருடைய மனம் தியானத்திலே சென்றது. பிற கடமைகளைப் புறக்கணித்தார். அன்றாட செயலுக்கும் உணர்ச்சிகளுக்கிடையே சமநிலை அடையப் பாடுபட்டார். அவர் அடைந்த துயரங்களையெல்லாம் அவருடைய பாடல்களில் பதிவு செய்தார். மனித நேயம் அவர் பாடல்களில் இழையோடியது.

வரகரி இயக்கம பதின்மூன்றாம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. அந்த இயக்கம் துக்காராமாலும் மேலும் பலராலும் வலுப்படுத்தப்பட்டது. அந்த இயக்கத்தில் வந்துவிட்டால் எச்சமயத்தாரும் சமமாகவே நடத்தப்படுவர். ஆன்ம நேய ஒருமைப்பாடு வளர்ந்தது. பார்ப்பனர்களின் சாதியப் பாகுபாடுகள் தளர்ந்தன. மகளிர் நிலையும் உயர்ந்தது. துக்காராம் கிராமத்தைச் சுற்றி வாழ்ந்து கொண்டிருந்த வைதீக மனோபாவம் கொண்டவர்களுக்கு துக்காராமின் பாடல்கள் ஒரு பெரிய தலைவலியைக் கொடுத்தது. தீண்டாமையின் கொடுமைகளை கடுமையாகக் கண்டித்தது. பார்ப்பனியத்தின் கொடுங்கோன்மையை வெளிப்படையாகக் கண்டித்தார். சமயத்தின் பேரால் நடைபெறும் சடங்குகளையும், அச்சடங்குகளில் தீவிரப் பற்றுடையவர்களையும் கண்டித்தார்.

சமஸ்கிருத மொழியைத் தூக்கி கிடப்பில் போட்டு விட்டு, மக்களின் அன்றாட பேச்சு வழக்கு மொழியைத் தேர்ந்து எடுத்தார். தீவிர உருவ வழிபாட்டின் முக்கியத்தை குறைத்தார். ஒரு தெய்வ வழிபாட்டின் கீழ் பக்தர்களையெல்லாம் ஒன்று திரட்டினார்.

இராமனும் இரஹீமும் ஒன்றென போதித்து மக்களுக்கு கடவுள் ஒருவரே என்ற போதனை, மாகராட்டித்தில் செல்வாக்குப் பெற்றது. இதனால் பார்ப்பனர்கள் கல்வியிலும், சமயத்தின் சடங்குகளிலும் தாங்கள் அனுபவித்த உரிமைகள் நீர்த்துப் போகாமல் கவனமாக இருந்தனர்.

வைணவ சமயத்தை வளர்த்த திருத்தொண்டர்கள் சூத்திரர்கள் என்ற அம்மக்கள் தங்கள் வாழ்க்கை

நிலையை உயர்த்திக் கொண்டனர். அதனால் சூத்திரர்களிடமிருந்து பனியாக்களிடமும் மகர் என்று அழைக்கப்பட்ட தீண்டத்தகாதவர்களிடமிருந்து திருத்தொண்டர்களை திரட்டினர். உயர் சாதியினராக பார்ப்பனர்களும் முஸ்லீம்களும் அவரை ஒருங்கே வைத்துப் போற்றினர். துக்காராமின் பாடல்கள் அனைத்து மட்டங்களிலும் பயன்பட்டன.

துக்காராமின் எழுத்துகளில் கணிசமான ஒரு பகுதி தீண்டாமையின் கட்டுப்பாட்டின் கடுமைகளை விமர்சித்து எழுதியவை தான். மகாராட்டிர மாநிலத்தின் நாட்டுப்புறங்களில் வாழும் பல இலட்சக் கணக்கான மக்களிடையே நன்கு அறிமுகமானார்.

அன்றாட வாழ்வில் மக்கள் அவருடைய பாடல் வரிகளை அடிக்கடி மேற்கோள்காட்டி எடுத்துப் பேசுவர். அவருடைய பாடல்கள் முடியுந் தருவாயில் துக்காராம் சொல்கிறார் என்றே முடிப்பார். அவை அனைத்தும் வாய்மொழியாக வந்ததைக் கேட்டு தொகுக்கப்பட்டவை. அனைத்து மட்டத்தினரும் குன்பியர் என்ற மராத்திய தையல் தொழில் செய்வோர். தோட்ட வேலை பார்ப்போர், குயவர், பொற்கொல்லர், கழிந்தற்கு வருந்திய கணிகையர், அடிமைப் பெண்டிர், சாதி நீக்கம் செய்யப்பட்ட அனைத்துப் பிரிவினரும் அவருடைய பாடல்களைப் பாடி பரவச் செய்தனர்.

வரகரி இயக்கத்தினர் அவர்கள் காலத்தைப் பேணி ஒழுகுபவர் என்று வரகரியின் பொருள். அவர்கள் மதுவகைகளைப் பயன்படுத்த மாட்டார்கள். ஊன் உணவினைத் தவிர்த்தவர்கள். துளசி மணிமாலையை கழுத்தில் அணிந்து கொள்வர். நன்மை செய்வதனையே அறமாகப் போற்றினர். துக்காராம் பிறந்த இடமான தெஹூவிற்கு சமய யாத்திரையை மேற்கொள்வர். அந்த அளவு அவருடைய பாடல்கள் மந்திரம் போல் வேலை செய்தன.

இந்நிலையில் திவான்கள், தேஷ்பாண்டுடக்கர், குல்கரினி என்ற பதவிகளில் இருந்து கொண்டு அந்நிய ஆட்சிகளுக்குத் தொண்டு ஊழியம் செய்ய வெட்கப்படவில்லை. துக்காராம் சைத்தன்யர் நெறியில் சேர்க்கப்பட்டார். அவருடைய குருநாதர் இராகவ சைத்தன்ய கோயிலுக்கு இன்றும் வட இந்தியர்களும் முஸ்லீம்களும் சென்று வழிபடுகின்றனர். சைத்தன்யர்கள் வேதமே எல்லாம் என்பதை ஒத்துக் கொள்ளாதவர்கள். நால்வர்ண நெறியை மதிக்காதவர்கள். இந்து சமயச் சடங்குகளை இடைவிடாது எள்ளி நகையாடினர். தெய்வத்துக்கு நேர்ந்து கொள்ளல், குரு சீடர் உறவு முறை, வசிய ஆற்றல்கள் இவைகளை கைவிடுதலே உண்மை சமய நெறி. நடைமுறைக்கு பொருத்தமானதாகவே சமய நெறி விளங்க வேண்டும் என்றார்.

இப்படிப்பட்ட செயல்களால் மேல் வர்ணத்தினர் கோபம் கொண்டனர். அவரை பழிவாங்கத் திட்டமிட்டனர். பாப்பாஜி என்ற பார்ப்பனன் துன்பம் பல செய்தான். அவருடைய மாடு அடித்துக் கொல்லப் பட்டது. மிக அற்பமான சிறய குற்றங்களுக்காக

**இவ்வுலகில் மனிதன் பிறந்து வாழ வேண்டும் என்பது இயற்கை நியதி. அது மனிதனுக்கு விதிக்கப்பட்ட விதியாகும். உலகம் மாயை என்பது பாதி உண்மையன்றி முழு உண்மாயையாகாது. இல்லறசூழ்ச்சியில் சிக்கினாலும் இல்லறத்தின் கடமைகளை செவ்வனே செய்தார் துக்காராம்.**

தண்டனை விதித்து, அவரை ஊரிலிருந்து ஒதுக்கினர். கடுமையான சோதனைக்கு ஆளான பிறகு ரமேஷ்பட் என்பவர் நீ எழுதிய பாடல்களையெல்லாம் எடுத்துச் சென்று உன் கையாலேயே அவற்றை ஆற்றில் போட்டு மூழ்கச்செய் என்று ஆணையிட்டதாக மதிபதி என்பவர் தெரிவிக்கிறார். சூத்திரன் மூளையில் அறிவு செறிந்திருக்க முடியாது, சூத்திரன் சிறந்த ஞானியாக முடியாது என்றனர்.

துக்காராம் மீது கோபமாக இருந்த பார்ப்பனர்கள் கடைசி முயற்சியாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். அவர்களின் முயற்சியின் விளைவாகத் துக்காராமின் எழுத்துகளுக்குத் தடை பிறந்தது. தான் எழுதிய பாடல்கள் அனைத்தும் தன்னுடைய விருப்பத்தால் அன்று, கடவுளின் ஆணைக்காகவே, அதைத் தவிர சொல்வதற்கு ஒன்றுமில்லை. நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்யுங்கள். என்னை விட்டல் பெருமான் காப்பாற்றுவார் என்றார்.

பதின்மூன்று நாட்களுக்குப் பிறகு நீரில் மூழ்கடித்த தாள்கள் நீர்மேல் மிதந்தன. அவருடைய வாழ்க்கையில் வழிநடத்தும் தலைவைர் யாரும் இல்லை. கவிதை எழுதவது எப்படி என்று யாரும் அவருக்கு கற்றுத் தரவில்லை.

அவருடைய எளிய சேவை நோயாளிகளுக்கு உதவுதல், களைத்து சோந்தவர்களின் பாரத்தை தூக்கிச் சென்று உதவுதல், தாகமுற்றோர்க்கு தண்ணீர் தருதல், பசித்தோர்க்கு புசிக்க உணவு கொடுத்தல் என்று மகிபதி கூறுகிறார்.

துக்காராம் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவரான பகினாபாய் என்ற அம்மையார் ஓர் இடத்தில், ஓ துக்காராம் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு நொடியில் காண முடியாத வண்ணம் மறைந்து விட்டீரே, இவ்வுலகில் மனிதன் பிறந்து வாழ வேண்டும் என்பது இயற்கை நியதி. அது மனிதனுக்கு விதிக்கப்பட்ட விதியாகும். உலகம் மாயை என்பது பாதி உண்மையன்றி முழு உண்மாயையாகாது. இல்லற சூழ்ச்சியில் சிக்கினாலும் இல்லறத்தின் கடமைகளை செவ்வனே செய்தார் துக்காராம். ஆறு குழந்தைகளுக்கு தந்தை, ஒரு கூட்டுக் குடும்பத்தின் தலைவன். தன் சொந்தச் சாதியில் உள்ள ஆடவர்களுக்கே தன் குல முறைக்கு ஏற்ற மரபிலே தன் பெண் மக்களைத் திருமணம் செய்து கொடுத்தார். அவர் இரண்டாவது மனைவி ஜீஜா அவருக்கு கொடுத்த தொல்லை ஏராளம்.

தனியிடம் நாடி பாம்நாத் மலைக்குன்றுக்குச் சென்று, தியானம் கைவரப்பெற்று, தான் பெற்ற ஆன்மீக அனுபவத்தை அழகிய பாடல்களாக சித்தரித்தார். அருட்பாடல்களாகவே அவை வெளி வந்தன. பாடி அனுபவிக்க வேண்டியவை. சாகாவரம் பெற்றவை. மராட்டிய மக்களின் நாவில் என்றும் நர்த்தனமாகுபவை.

சில பாடல்கள் ஒரு மாதிரிக்கானவையே காண் போம் பின் வருமாறு:

*இது நான் பிறந்த நாடல்ல*
*எதிர்பாராத வண்ணம் இங்கு வந்து சேர்ந்தேன்,*
*யான் அலைந்து திரிய என்னுடையதென்று*
*எதை நான் உரிமை கொண்டாட முடியும்*
*நானே இங்கு ஒரு அந்நியன்*
*அடுத்ததாக நன்று செய்தனை*
*ஓ இறைவான நான் ஓட்டாண்டியானேன்*
*நன்று செய்தனை*
*இந்தப் பஞ்சம் என்னை வைத்துவிட்டது*
*கழிந்ததற்கு இரங்க உன்னைத் தியானிப்பதை*
*உறுதியாகக் கொண்டது*
*வாழ்க்கையோ கசந்து வாந்தி எடுக்கும் தன்மையாயிற்று*
*நன்று செய்தனை*
*ஓ இறைவா வாய்த்த மனைவோ ஓர் அடங்காப்பிடாரி*
*நன்று செய்தனை*
*எல்லோர் முன்பும் எனக்கு இந்த துன்பம்*
*நன்று செய்தனை*
*உனக்கே கோயில் கட்டினேன் யான்*
*பெண்டு பிள்ளைகளைப் பேசினேன்*
*ஏகாதசி நன்னாளில் ஏற்குமிவ்வுறுதி இனிது*
*காய்நத வயிற்றோடு கண்விழித்திருக்க இயலும்*
*உலக வாழ்க்கையை உன்னி உன்னி யான்*
*மனநோயாளியாக மாறிப் போனேன்.*
*உண்மை எது பொய்யெது எனத் தடுமாறி நிற்கையில்*
*இறைவன் ஒருவனே எல்லாம் அறிவான்*
*ஒன்று மட்டும் உறுதியாகும்*
*கடவுளை நம்பினோர் கைவிடப்படார்*
*துக்காராம் சொல்கிறார்*
*எந்தன் மனைவி இயற்கையெய்தினாள்*
*யான் விடுதலையுற்றேன்*
*மாயை யிலிருந்து விடுதலை செய்தார்*
*வாழ்வில் கொண்ட*
*அக்கறை ஆர்வம் அனைத்தும் மறைந்தன*
*துயருறு மொழியில் துக்காராம் கூறுகிறார்*
*எல்லோரும் கூடி என்னைப் பார்த்து*
*எள்ளல் செய்தனர்*
*காலத்தை வீணே கழிப்பவர் என்றும்*
*சோம்பித் திரிபவர் தூக்கா என்று*
*தூக்கா சொல்லால் சுட்டார்*

மராத்தி கவிதைகளில் பக்தி நெறியை விளக்கிக் கூறுவதில் தலைசிறந்த துக்காராமின ஒரு பாடல், உன்னை நான் ஓயாது நினைப்பதற்கு என்னை நீ வீடற்றவனாக்கு, செல்வமற்ற தரித்திரனாக்கு, குழந்தைச் செல்வமற்ற குடும்பத்தானாக்கு.

*எது அகங்காரம் ஆணவம் தாக்குண்டு தூள் தூளாகட்டும்*

*என்னை அணி செய்து, வந்த என் நாமம் எரிந்து சாம்பலாகட்டும்,*

*எனது மரணம் மரித்து விட்டது. யான் மரணமற்றவன் ஆனேன்.*

*கண்ணயர்ந்து துங்குவதற்குக் கல் படுக்கையே சாலச் சிறந்தது.*

*உடம்பைப் போர்த்தும் போர்வகைள் வானப் போர்வையே சாலச் சிறந்தது.*

*எதற்காகவேனும் ஏன் ஆர்வம் காட்ட வேண்டும்?*

*ஆர்வம் காட்டுவது வாழ்க்கையே வீணாக்குவதாம்.*

துக்காராம் தன்னுடைய முக்திக்காக சமயம் ஒன்றை எற்றுக் கொண்டாரில்லை. மனித குலம் முழுவதற்கான துன்பத்தைத் துடைக்க வந்த ஒன்றாக சமயத்தை கருதினார். தூய உள்ளத்திற்கு எவ்வித அறிவுரையும் தேவையில்லை. ங்கள் எண்ணம் போக்கில் சில மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இப்போது உங்களுக்குக் கிடைத்திருக்கும் வாழ்வு இனி என்றும் திரும்பப் போவதில்லை. உடம்மைப் போர்த்தியிருக்கும் புறத் தோலைக் கழுவதைத் தவிர என்ன செய்தீர்கள் நீங்கள். ஒரு சாதாரன மனிதன் வாழ்ந்த வாழ்க்கையைப் போல மிக மிக ஒத்திருந்தது. அவர் எழுத்தாளர்களுக்கு கூறிய அறிவுரை செம்பொருளைச் சென்று தரவல்லன எவையோ அவற்றை மட்டுமே பேசு, அன்றெனில் பேச வேண்டாம்.

துக்காராம் கருத்தினை நம் கருத்தினில் கொண்டு செயல்படுவோம். நமது வாழ்க்கையும் அமர வாழ்க்கையாக அமையும். மராட்டிய பக்தி இலக்கியத்தில் துக்காராம் பாடலகள் காலத்தால் அழியாத ஓவியமாம். நாமும் அவர் புகழ் நாளும் பாடுவோம். வாழ்க அருட்கவிஞர் துக்காராம் புகழ் பல்லாண்டு.

*நன்றி* : **சென்னை ரிப்போர்ட்**

# கல்லூரிகளில் இந்திப்பாடம்?

**இந்தி மொழித் திணிப்பு முயற்சி, நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைத்துவிடும். ஆகவே, அனைத்துத் தரப்பினரும், கல்வி அமைப்புகளும் மக்கள் கருத்தை திரட்டி, இந்த சுற்றறிக்கையை வாபஸ் பெறச் செய்ய நிர்பந்திக்குமாறு வலியுறுத்துகிறோம்.**



அண்மையில் வெளியிடப்பட்ட புதிய தேசிய கல்விக் கொள்கை வரைவு அறிக்கையில், நாடு முழுவதும் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துமாறு பரிந்துரை செய்யப்பட்டு இருந்தது. இது, இந்தியைத் திணிக்கும் முயற்சி என்று தென்னிந்தியாவில் கடும் எதிர்ப்பு எழுந்தது. இதையடுத்து, மூன்றாவது மொழியை அவரவர் விருப்பப்படி தேர்வு செய்து கொள்ளலாம் என்று வரைவு அறிக்கையில் மத்திய அரசு திருத்தம் செய்தது. இந்நிலையில் அனைத்து இளநிலை பட்டப்படிப்புகளிலும் இந்திப் பாடத்தை கட்டாயமாக்கும் முயற்சி குறித்த தகவல்கள் வெளியாகி உள்ளன.

நாடு முழுவதும் உயர்கல்வியை நிருவகிக்கும் உயரிய அமைப்பாக பல்கலைக்கழக மானியக்குழு (யுஜிசி) திகழ்ந்து வருகிறது. அந்த அமைப்பு, பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பி உள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் யுஜிசி எழுதியுள்ள கடிதத்தில் மேற்கோள் காட்டியுள்ளபடி, இங்கு தெளிவுபடுத்தப்படுவது என்னவென்றால், இந்தி கற்பித்தல் தொடர்பான ஆலோசனைகள், அபிப்பிராயங்கள் பல்கலைக்கழகங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

இப்போது கவனப்படுத்த விரும்புவது என்னவென்றால், பல்கலைக்கழகங்கள் யாவும் சுயாட்சி பெற்ற நிறுவனங்களாகும். அவர்கள் தங்கள் அதிகார வரம்புக்குள் எந்த ஒரு பாடப் பிரிவையும் தேர்வு செய்து, எந்த விதத்தில் அதை போதிப்பது என்பதை முடிவு செய்து கொள்ளலாம். என்று கூறப்பட்டுள்ளது.

இது, இந்தியைத் திணிக்கும் மற்றொரு முயற்சியாக கருப்படுகிறது. இதற்கு அரசியல் கட்சிகளும், மாணவர் களும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.


மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மேல்மட்ட குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது :

இளநிலை பட்டப்படிப்புகளில் இந்தியைக் கட்டாய பாடமாகத் திணிக்க யுஜிசி மேற்கொள்ளும் முயற்சி கவலை அளிக்கிறது. ஏற்கனவே புதிய கல்விக் கொள்கை மூலம் இந்தியைத் திணிப்பதற்கு எதிர்ப்பு எழுந் துள்ள நிலையில், இந்த முயற்சி நடப்பது வினோதமாக இருக்கிறது.

இந்தியா, பல்வேறு மொழிகளையும், கலாச் சாரங்களையும் கொண்டது. ஒரு குறிப்பிட்ட மொழியைத் திணிக்க முயற்சிப்பது, மற்ற மொழிபேசுபவர்கள் இடையே போராட்டத்தைத் தூண்டிவிடும் வேற்றுமையில் தான் நமது ஒற்றுமை அடங்கி இருக்கிறது. இந்தி மொழித் திணிப்பு முயற்சி, நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைத்துவிடும். ஆகவே, அனைத்துத் தரப்பினரும், கல்வி அமைப்புகளும் மக்கள் கருத்தை திரட்டி, இந்த சுற்றறிக்கையை வாபஸ் பெறச் செய்ய நிர்பந்திக்குமாறு வலியுறுத்துகிறோம். என்று கூறுப்பட்டுள்ளது.

இதுபோல், டெல்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் மாணவர்களும், பேராசிரியர்களும் யுஜிசியின் திட்டத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தினர். யுஜிசி யின் சுற்றறிக்கை குறித்து விவாதிப்பதற்காக, நேரு பல்கலைக்கழகத்தின் கல்விக் கவுன்சில் கூட்டம் நடைபெற இருக்கிறது. கடும் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், யுஜிசி செயலாளர் ஜெயின் இதுகுறித்த விளக்கம் அளித்துள்ளார்.

அந்தக் கடிதம், கருத்துக் கேட்பதற்காக சில பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது கட்டாய உத்தரவு அல்ல. இந்தியை கட்டாயப் பாடம் ஆக்க முடியுமா என்று மத்திய மந்திரி கேட்டதால், கருத்துக் கேட்பதற்காக மட்டுமே அனுப்பி உள்ளோம் என்று விளக்கம் அளித்துள்ளார்.




# 10% சதவீத இடஒதுக்கீடு! பா.ஜ.க.அரசு சமூகநீதியை கொலைசெய்ய திட்டமிடுகிறது!

## அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் எம்.எல்.ஏ. கருணாஸ் பேச்சு

இடஒதுக்கீடு என்பது வறுமையில் உள்ளோர் அனைவரும் பெற்றுக்கொள்ளும் இலவசத் திட்டமல்ல! மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காக கொண்டுவரப்படும் சமூகநீதி விடுதலைக்கான திறவுகோல்!

இத்தகைய சமூக நீதிக் கோட்பாட்டை முற்றிலும் அழித்தொழிக்க வேண்டுமென்று பா.ஜ.க.அரசு செய்யும் சதி! மேலும் இந்த பொருளாதரா ரீதியான இடஒதுக்கீடு என்ற திட்டத்தை கையில் எடுத்திருப்பது வரவேற்க தக்கதல்ல மிகவும் கண்டிக்கத்தக்கது.

மிகவும் நுட்பமாக தற்போது பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை கொண்டு வந்துள்ளனர். அவர்களின் நோக்கம் முற் பட்ட வகுப்பைச் சார்ந்த ஏழை எளியோரை மேம் படுத்துவது என்பதல்ல; மாறாக, சமூக நீதிக் கோட் பாட்டை அழித்தொழிப்பது.



பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீட்டை ஒரு பிரிவினருக்கு நடைமுறைப் படுத்திவிட்டால், காலப்போக்கில் அனைத்து சமூகப் பிரிவினருக்கும் பொருளாதார அடிப்படையில் மட்டுமே இடஒதுக்கீடு என்பதை நடைமுறைப் படுத்துவதற்காகவே இந்த முயற்சி!

சமூக ரீதியாக மட்டுமே இடஒதுக்கீடு வழங்க அரசியல் சட்டம் வழிவகை செய்கிறது. பொருளாதார ரீதியாக இடஒதுக்கீடு வழங்க முடியாது. இந்த திட்டத்தை செயல்படுத்தினால் ஊழல் தான் அதி கரிக்கும். பொருளாதார ரீதியாக பின்தங்கியவர் என பணம் கொடுத்து சான்றிதழ் வாங்கும் சூழல் ஏற்படும்

பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு பொதுப் பிரிவில் உள் பிரிவாக 10 சதவீத இடஒதுக்கீட்டை மருத்துவக் கல்லூரிகளில் தமிழக அரசு செயல்படுத் தினால் மருத்துவப்படிப்பில் 25 சதவீத இடங்களை ஒதுக்குவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதனை ஏற்று இந்த ஆண்டு பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு 10 சதவீத இடஒதுக்கீடு அளித்தால், பின்தங்கிய, பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மருத்துவபடிப்பில் சேரும் எண்ணிக்கை குறையும் நிலை ஏற்படும்.

10 சதவீத இட ஒதுக்கீடு என்பது அரசமைப்பு சாசனத்திற்கு எதிரான மோசடியாகும். குறிப்பிட்ட சமூகப் பிரிவைச் சேர்ந்த மக்களின் நிலைமைகள் தனிப் பட்ட முறையில் மாறுபடலாம். ஆனால் அந்தச் சமூகத் திற்கு உரியதாக அறிவிக்கப்படும் இட ஒதுக்கீட்டுப் பலன்களைப் பெற அந்த மக்கள் அனைவரும் தகுதி பெற்றவர்களாவர்.

இது வரையில் இந்தியாவில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் மைய நியாயமாக இருந்து வந்திருப்பது இதுதான். இந்தக் கொள்கையை நீதிமன்றங்கள் பல்வேறு தீர்ப்புகளின் மூலம் உறுதிப் படுத்தி வந்துள்ளன.பொருளாதாரப் பின்னடைவு நிலைமை போன்ற மற்ற மற்ற காரணங்களின் அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கப்படுவதை நீதிமன்றங்கள் அனுமதித்ததில்லை.

முன்னேறிய வகுப்பினரே கல்வி வேலை வாய்ப்பு களில் நிறைந்திருந்தனர். இதன் காரணமாகவே, மற்ற வகுப்பினர் முன்னேறி வருவதற்கான ஏற்பாடாக இட ஒதுக்கீட்டு முறை கொண்டு வரப்பட்டது. இந்திய அரச மைப்புச் சட்டத்தின் உறுப்பு 15 16களில் இதற்கான திருத்தங்கள் செய்யப்பட்டு, சமூக வகையிலும், கல்வியிலும் பின் தங்கியவர்களைக் கை தூக்கி விடுவ தற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இப்போது, தமிழ்நாட்டில் முன்னேறிய வகுப்பாக பிராமணர்கள் தான் கோலோச்சுகின்றனர். தமிழ் நாட்டில் முன்னேறியோர் பட்டியலில் பிராமணர் அல்லாதவர் எண்ணிக்கை மிகவும் குறைவு. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலோர் இட ஒதுக் கீட்டுப் பட்டியலுக்குள் வந்துவிடுகின்றனர். மக்கள் தொகையில் பிராமணர்கள் 3 விழுக்காட்டினராக உள்ளனர். அவர்களில் பொருளியல் வகையில் பின் தங்கியவர்களுக்கு, 10 விழுக்காடு இட ஒதுக்கீடு என சட்டம் இயற்றியுள்ளது எந்த வகையில் ஞாயம்? அவர்கள் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்ப கல்வியும், வேலை வாய்ப்பும் பெறவில்லை என்று இந்திய அரசு எதன் அடிப்படையில் கணக்கிட்டது?

இங்கே பாதிக்கப்படுவது வெறும் சமூகநீதி மட்டுமல்ல இன நீதி பாதிக்கப்படுகிறது; தமிழினத் திற்கு அநீதி இழைக்கப்படுகிறது! தமிழ்நாட்டிற்கு இந்தச் சட்டத்தைப் பொருத்திப் பார்த்தால், இந்த 10 விழுக்காட்டு இட ஒதுக்கீட்டுச் சட்டத்தால் இந்தியா விலேயே மிகக் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகப் போவது தமிழினம் தான் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்!

“பொதுப் பட்டியல்“ சாதியினருக்கு 10% இட ஒதுக்கீடு என்று வெளியே சொல்லுகிறார்களே தவிர, சட்டத்தில் அப்படி அவர்கள் நேரடியாக எழுத வில்லை. அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 15இன் உட் பிரிவு 4 5இன் கீழ் அரசு தனியார் தன்நிதி கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வரும் சாதிப் பட்டியலில் “இடம்பெறாத சாதிகளில்“ 8 இலட்சம் ரூபாய்க்கும் கீழ் ஆண்டு வருமானம் கொண்ட வர்களுக்குத்தான் இந்த 10% இட ஒதுக்கீடு என்று குறிப்பிடுகிறார்கள்.

இந்திய அரசு வேலை வாய்ப்புகளிலும், இந்த 10 விழுக்காட்டு இட ஒதுக்கீட்டை வழங்குகிறார்கள்.

பொதுப் பட்டியலில், அந்தப் பொதுப் போட்டிக் குத் தகுதியான தாழ்த்தப் பட்டவர்கள் போட்டியிட்டு வர முடியும்; பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப் பட்டவர்கள் போட்டியிட்டு வர முடியும். இந்த உரிமை அவர்களுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகளைக் கணக்கிட மண்டல் குழு தனி ஆய்வு மேற்கொள்ளவில்லை. தமிழ்நாட்டில் ஏற்கெனவே விரிவான ஆய்வு நடத்தி பட்டியல் அணியம் செய்யப்பட்டிருந்தது. எனவே, மண்டல் குழு அப்பட்டியலை அப்படியே ஏற்றுக் கொண்டது.

இப்போது அப்பட்டியலில் வராத சாதியினர் எனும் போது, தமிழ்நாட்டில் 3 விழுக்காடு உள்ள பிராமணர் களும், 1 விழுக்காடு உள்ள இதர பிராமணர் அல்லாத சாதிப் பிரிவுகளும்தான் இந்திய அரசு வழங்கியுள்ள இந்த 10% இட ஒதுக்கீட்டுக்குத் தகுதியானவர்கள் ஆவர். அதாவது, தமிழ்நாட்டில் வெறும் 3% உள்ள சாதியினர்க்கும் 10% இடத்தை ஒதுக்கிக் கொடுத் திருக்கிறார்கள்! போட்டியே இல்லாமல் ஆதிக்க சாதியி னர்க்கு மூன்று மடங்கு இடத்தைக் கொடுத்து விடு கிறார்கள். அதுவும் இல்லாமல், பொதுப் போட்டிக்கு உள்ள மீதமுள்ள 21 விழுக்காட்டு இடங்களிலும் அவர்கள் வந்துவிடுவார்கள்! எவ்வளவு பெரிய அநீதி இது?

இப்போதிருக்கும் சமூக வாரியான இட ஒதுக் கீட்டை அப்படியே வைத்துக் கொண்டு, அதற்கு மேல் தனியாகத்தானே இந்த 10% பொருளியல் ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இதனால் இட ஒதுக்கீடு பெற்ற சாதி களுக்குப் பாதிப்பேதும் இல்லையே என்று கேட் கின்றனர்.

பொதுப்போட்டிக்கான பங்கிலிருந்து இந்த 10% இடம் பறிக்கப் படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். அதைவிட, இதன் நீண்டகால விளைவு கடுமையானது. வருமானம், பொருளியல், வாய்ப்பு ஆகியவையும் இட ஒதுக்கீடு வழங்குவ தற்கான அளவுகோல் என்பது ஏற்கப்பட்டால் நாளைக்கு சமூக வாரியான இட ஒதுக் கீடு என்பதே இல்லாமல் போகும் ஆபத்து உள்ளது.

பா.ஜ.க. அரசு! சமூக நீதியை கொலை செய்ய துணிந்துவிட்டார்கள்! நம் அதை முறியடிக்க போராடவேண்டும்.

# சென்னையில் மாநாட்டைப்போல் நடைபெற்ற கவியரசர் கண்ணதாசன் விழா




தமிழ்த் திரையுலகின் புகழ்பெற்ற பாடலாசிரியரும், தமிழ் மொழி ஆளுமையில் தடம் பதித்த பாவலருமான கவியரசர் கண்ணதாசன் அவர்களது 92ஆவது பிறந்த நாளையொட்டி, 23.06.2019 மாலை சென்னையில் தமிழ்க் கலை இலக்கியப் பேரவை சார்பில் கண்ணதாசன் விழா எழுச்சியுடன் நடை பெற்றது.

சூன் 23 – ஞாயிறு மாலை சென்னை வடபழனி கமலா திரையரங்கம் அருகிலுள்ள திரைப்பட இசைக் கலைஞர்கள் சங்க அரங்கில் நடைபெற்ற இவ் விழா விற்கு, தமிழ்க் கலை இலக்கியப் பேரவைத் தலைவரும், திரைப்படப் பாடலாசிரியருமான பாவலர் கவிபாஸ்கர் தலைமை தாங்கினார். த.க.இ.பே. பொதுச் செயலாளர் பாவலர் முழுநிலவன் வரவேற்புரையாற்றினார்.

**நூல் வெளியீடு**

பாவலர் கவிபாஸ்கர் எழுதிய "***காற்றில் மிதந்து வருகிறார் கண்ணதாசன்***" நூலின் புதிய பதிப்பை, திரைப்படப் பாடலா சிரியர் கவிஞர் முத்துலிங்கம் வெளியிட்டு உரையாற்றினார். சட்டப்பேரவை உறுப்பினரும், தென்னிந்திய நடிகர்கள் சங்கத் துணைத் தலைவருமான நடிகர் சேது. கருணாஸ், திரைப்பட இசைக் கலைஞர்கள் சங்கத் தலைவர் இசையமைப்பாளர் தினா, சேலம் ஆர்.ஆர். பிரியாணி நிறுவனர் தமிழ்த்திரு. ஆர்.ஆர். தமிழ்ச்செல்வன், தாரை பயணம் தமிழ்த்திரு. தாரை கு. திருஞானசம்பந்தம் ஆகியோர் நூலைப் பெற்றுக் கொண்டனர்.

திரைப்பட இயக்குநர் மு. களஞ்சியம், கவிஞர் ஜான் தன்ராஜ் ஆகியோர் நூல் குறித்து சிறப்புரை நிகழ்த்தினர். திருவாளர்கள் மு. களஞ்சியம், கவிஞர் ஜான் தன்ராஜ் ஆகியோருக்கு தமிழ்த் தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளர் தோழர் கி. வெங்கட் ராமன் துண்டணிவித்து சிறப்பு செய்தார்.

**விருது வழங்கல்**

கண்ணதாசன் பாடல்களை திரையில் பாடிய "இன்னிசை வாணி" திருமதி. வாணி ஜெயராம் மற்றும் "இறையிசையரசி" திரு. எல்.ஆர். ஈஸ்வரி ஆகியோர்க்கும், கண்ணதாசரால் அறிமுகப் படுத்தப்பட்டு புகழ்பெற்ற திரைப்படப் பாடலாசிரியராக விளங்கும் கவிஞர் பூவை செங்குட்டுவன் அவர்களுக்கும் "தமிழ்க் கலைச்சுடர்" விருது வழங்கப்பட்டு பாராட்டப்பட்டது.

தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் ஐயா பெ. மணியரசன் அவர்கள், இவ்விருதை வழங்கி, கண்ணதாசன் குறித்து நிறைவுப் பேருரையாற்றினார்.

தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் நா. வைகறை, தமிழ்க் கலை இலக்கியப் பேரவை செயற்குழு உறுப்பினர் பாவலர் நா. இராசாரகுநாதன் ஆகியோர் நிகழ்வை நெறிப்படுத்தினர். பாவலர் ஆரல் கதிர்மருகன் நன்றி கூறினார்.

நிகழ்வின் ஒருங்கிணைப்புப் பணிகளில் பங்காற்றிய செந்தமிழ்நாடு ஊடகவியலாளர் சங்கத் தலைவர் திரு. விசுவனூர் தளபதி அவர்களுக்கு ஐயா பெ. மணியரசன் துண்டணிவித்து சிறப்பு செய்தார்.

அரங்கு நிரம்பிய கூட்டமாக நடைபெற்ற இந் நிகழ்வில், பேரறிவாளன் தாயார் திருவாட்டி அற்புதம் அம்மையார், தஞ்சை பாரத் அறிவியல் கல்லூரி முதல்வர் திருமதி. புனிதா கணேசன், திரைப்படப் பாடல் ஆய் வாளர் திரு. அலிகான், தமிழ்ப் பேரரசுக் கட்சித் தலைவர் திரு. வ. கௌதமன் உள்ளிட்ட திரளானோர் பார்வை யாளர்களாப் பங்கேற்றனர்.

கவிஞர் கண்ணதாசன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு, தமிழ்நாட்டின் முகாமையான தலைவர்களுடன் அவர் எடுத்துக் கொண்ட படங்கள் ஆகியவை நிகழ்வு நடைபெறும் அரங்கிற்கு வெளியே சிறப்பு ஒளி ஏற்பாட் டுடன் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது பார்வையாளர்களை வெகுவாக ஈர்த்தது.

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**



கவிஞர் ஏர்வாடி இராதாகிருஷ்ணன் அவர்களுடன் முற்றம் இதழாசிரியர் திரு. விசவனூர் வே. தளபதி, செய்தியாளர் திரு. சைதை மணிமாறன்.




MUTRAM - Tamil & English Monthly  RNI No. TNBIL/2010/36924.

தஞ்சாவூர்

97907 69523 / 73587 47198

கிரேஸ் பேன்ஸி

GRACE The Fancy Shop



All Kinds of Fashion jewels, Hand bags, Cosmatics

ALL STATIONERY & BRIDAL SETS AVAILABLE HERE

044 22770041/ 9444487811 / 9940129226

Karthika

Fashion Jewellery



கார்த்திகா

பேஷன் ஜுவல்லரி





No.12137 Velachery Main Road, Somu Complex, Medavakkam, Chennai - 600 100